GOKULAM
செப்டம்பர் 2010 ❖ விலை ரூ.8/- ❖ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



36 கோட்டைகள்!

'ரெட்டை வால்' பையன்!

என் செல்லம்!

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1726


1727


1728


1729


1730


1731


1732


1733


1734


1735


1736


1737


1738


1739



1740


1741


1742


1743


1744


1745


1746


1747


1748


1749


1750

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

கல்கி
நிறுவன வெளியீடு
தரம் நிரந்தரம்

செப்டம்பர் 2010 மலர் : 28 இதழ் : 8

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்

வெளிச்ச விழுதுகள்!

உலகமே வியந்து பாராட்டும் வெற்றிகளை அடைந்தவன் மாவீரன் அலெக்சாண்டர். தன்னுடைய வெற்றிகளை எண்ணி அவன் எவ்விதமான கர்வத்தையும் அடையவில்லை. மாசிடோனியாவின் பிலிப் பெற்ற மைந்தன் என்று பொதுவாகச் சொன்னாலும், 'அரிஸ்டாட்டிலின் மாணவன்' என்று குறிப்பிடப்படுபவன்!



ஒரு மாணவனை நல்ல மாணவனாக, நல்ல மாணவனை சிறந்த மாணவனாக, சிறந்த மாணவனை சாதனையாளனாக உயர்த்துவதில் ஆசிரியரே அடித்தளமாகிறார். அதனால்தான் பாரதி, கண்ணன் பாட்டில் சொல்லும்போது 'கண்ணன், என் ஆசான்' என்றும் பாடுவான்.

'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்றுதான் வரிசைப்படுத்துவது வழக்கம். முன்னாளில், 'குரு வாழ்க; குருவே துணை!' என்று சொல்லித்தான், மாணவர்களுக்கான கல்வியே தொடங்கும். ஆசிரியர்கள், தங்களின் மாணாக்கர்களின் வெற்றியில்தான் பரிபூரண மகிழ்வை எய்துகிறார்கள். அந்த ஆசிரியர்களைப் பெருமைப்படுத்தும் தினம் செப்டெம்பர் 5.

தம்முள் சேகரித்த அறிவு வெளிச்சத்தை, தம் மாணவர்களுக்குத் தந்து அவர்களை விழுதூன்றச் செய்கின்ற ஆசிரியர்களை, அந்த நாளில் வணங்கிச் சந்தோஷப்படுங்கள்; அவர்களின் வாழ்த்து உங்களை மேலும் தகுதிப்படுத்தும்.

அன்புடன்,
கோகூ



குறும்பு

"ஐயா, புலவர்கள் எல்லாரும் ராஜாவையோ, ஜமீன்தாரையோ பரிசுக்காகப் புகழ்ந்து பாடினவங்கதானே? உள்ளதை உள்ளபடி பாடினவங்க உண்டா?" நண்பர் கேட்டவுடன், சிரித்தபடியே பேச ஆரம்பித்தார் தமிழாசிரியர் இராமசாமி.

"எல்லாப் புலவர்களும் பரிசுக்காக பாடினவங்க இல்லை. அதை விடுங்க. நீங்க கேட்டதுக்காக ஒரு கதை சொல்றேன். இராக்கப்ப பூபதின்னு ஒரு ஜமீன்தார். ஆனா, மகா கஞ்சன். புலவர்களையே அவருக்குப் பிடிக்காது; பரிசு தரணுமேன்னு கவலை. அதனால, யாராவது வந்து பாடினா, 'நீங்க பாடினது புகழ்ச்சிதான். அதுல உண்மை இல்லை. உண்மை இல்லாத பாட்டுக்கு பரிசு தரமாட்டேன்'னு சொல்லி

உண்மைக்குப்



வீரசிகாமணி ஆதினமிளகி

விரட்டிடுவார். இந்தக் கல்லுலலேயும் நார் உரிச்சே தீருவேன்னு நினைச்சார் ஒரு புலவர். அவர் ஜமீன்தாரைப் பார்த்துப் பாடினார். அதைக் கேட்டவுடன் ஜமீன்தார் அசந்து போய் பரிசு கொடுத்து அனுப்பிட்டார்.''

''அப்படியென்ன உண்மையைப் பாடினார் அந்தப் புலவர்?''

''அண்ணன் என்பவன் தம்பிக்கு
மூத்தவன்;
வெண்ணெய் என்பது பாலில்
விளைவது;

பரிசு!

திண்ணை என்பது தெருவினில்
உயர்ந்தது;
கண்ணன் என்பவன் கண்ணிரண்டு
உள்ளவன்;
பாக்கு என்பது கமுகின் பழம்; பருப்பு
என்பது துவரை;
நாற்காதமும் முக்காதமும் நடந்தால்
ஏழுகாதம்;
மேற்கே நின்று பார்த்தால் கிழக்கது
தெரியும்;
ராக்கா! உண்மையைச் சொன்னேன்
ரட்சிப்பாயே!

- இதுதான் அந்தப் புலவர் பாடின பாட்டு!''

''சரியான ஆளுப்பா! இவர் சொன்ன உண்மையைக் கேட்ட அப்புறம், அந்த ஜமீன்தாருக்கு உண்மை மேலேயே கோபம் வந்திருக்கும்!''

கலகலவென்று சிரித்த தமிழாசிரியர் சொன்னார்: ''இல்லை. அதுக்கப்புறம் அவர் நிஜமாகவே புலவர்களை ஆதரிக்க ஆரம்பிச்சார்.''

கல்கி
கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!

“எங்க வீட்டுல கிளி இருக்கே. அது நல்லாப் பேசுமே'' என்று ஒரு சிறுவன் சொன்னால், ''எங்க வீட்டுல அழகான பொமரேனியன் இருக்கே. பஞ்சு மாதிரி அழகா மிதந்து வருமே'' என்பான் அவன் தோழன் பதிலுக்கு. இப்படி, செல்லப் பிராணிகள் வளர்ப்பு மனத்தை வசீகரப்படுத்தும் விஷயம்!

பிராணி என்பது விலங்கைக் குறிக்கும் சொல்தான். என்றாலும், மீன் வளர்ப்பு, புறாக்கள், முயல், பூனை என்று வீட்டில் வளர்க்கும் விலங்குகள் பல. 'வீட்டில் செல்லப் பிராணிகளை வளர்ப்பதால், ரத்த அழுத்தம் குறைகிறது' என்கிறார்கள் ஆய்வாளர் கள். அவற்றைக் கூட்டிக் கொண்டு

என் செல்லம்!

ராகவன்







நடப்பதால், நடைப் பயிற்சி செய்வதும் இயல்பாகிறது. தினமும் குறைந்தது இரண்டு கி.மீ. நடப்பதால், உடல் ஆரோக்கியம் சீரடைகிறது என்றும் சொல்கிறார்கள்.

வீட்டில் செல்லப் பிராணி வளர்ப்பது என்னும்போது, அதற்கேற்ற இடம், சுகாதாரம் ஆகியவற்றில் மிகவும் அக்கறை செலுத்த வேண்டும். பூனை, நாய் போன்றவற்றை வளர்ப்பது என்றால், அவற்றுக்கு உரிய காலத்தில் தடுப்பூசி போடுவது அவசியம்.



அதேபோல, அவற்றைக் கொஞ்சுவது என்றாலும் முகத்தில் வைத்து உரசுவது, தோளில் போட்டு விளையாடுவது... போன்ற செயல்களைச் செய்யக்கூடாது. அப்படி விளையாடினால், அவற்றின் ரோமங்கள் உதிரும். அவை நம் உடலுக்குள் தவறுதலாய்ச் சென்றால், நம் ஆரோக்கியத்துக்குக் கேடு விளைவிக்கும். குறிப்பாக, ஆஸ்துமா போன்றவற்றை ஏற்படுத்தக்கூடும்.

தடுப்பூசி போடுவதும் அந்தக் காரணத்தால்தான். தடுப்பூசிகளை உரிய காலத்தில் போடுவதும் அவற்றுக்குரிய மருந்துகளை அளிப்பதும் மிகவும் முக்கியம். அதனால், அவை நோயால் பாதிக்கப்படாது; நமக்கும் ஆரோக்கியக் குறை ஏற்படாது.

வளர்ப்புப் பிராணிகளை தொட்டுத் தூக்கி வளையாடியவுடன், கைகளையும் கால்களையும் நன்றாக சோப்பு போட்டுக் கழுவுவது மிக முக்கியம். அதில் எப்போதும் தவறக் கூடாது. செல்லப் பிராணி வளர்ப்பது சந்தோஷமான விஷயம் என்றாலும், அதன் ஆரோக்கியத்திலும் நம் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்த வேண்டியது அதைவிட முக்கியம்!

குட்டீஸ்... இனி செல்லங்களோடு விளையாடும்போது, இதையும் நினைவு படுத்திக் கொள்வீர்கள்தானே?

அட்டையில் :

டாமியுடன் தேவதர்ஷிணி

வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

டாக்டர் கு. கணேசன்



சக்தி தரும்

மனித உடலில் நோய் உண்டாவதற்கு நோய்க்கிருமிகளின் தாக்குதல், சத்துக்குறைவு, மாசுபட்ட சுற்றுச்சூழல், ஒவ்வாமை, பரம்பரை... என்று பல காரணங்களைக் கூறலாம். என்றாலும் எல்லோருக்கும் பொதுவான காரணம், ஒன்று உண்டு. அது நோய் எதிர்ப்புச் சக்தி குறைவு.

இன்று பெரும்பாலான குழந்தைகளுக்கு நோய்கள் வருவதற்கு முக்கியக் காரணம் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பதுதான். முறையான, அளவான, தரமான, சரியான சத்துள்ள உணவுகளைச் சாப்பிடுவோருக்கு நோய் எதிர்ப்பு சக்தி நன்றாகவே இருக்கும். வறுமை காரணமாகவோ, உணவின் அவசியம் தெரியாமலோ சத்தற்ற நொறுக்குத் தின்பண்டங்களைச் சாப்பிடுவோருக்கும் நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்துவிடும். அதே நேரத்தில் சிறு வயதிலிருந்தே நல்ல சத்துள்ள உணவுகளை உண்ணும் பழக்கத்தைக் கைக்கொண்டு, உடலில் நோய் எதி ர்ப்பு சக்தியை அதிகரித்துவிட்டால், நோயின் தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொள் ளலாம் என்பது உறுதி.

தினமும் இரண்டு காரட்!

உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதில், ரத்தத்திலுள்ள வெள்ளை யணுக்களுக்கு முக்கியப் பங்குண்டு. வெள்ளையணுக்களின் செயல்திறனை அதிகரிப்பதற்கு 'பீட்டா கரோட்டின்' எனும் சத்து தேவை. இச்சத்து பொதுவாக சிவப்பு, மஞ்சள், கரும்பச்சை நிறமுள்ள காய்கறி மற்றும் பழங்களில் நிறைய

உள்ளது. முக்கியமாக, காரட்டில் அதிகமுள்ளது. சமைத்த காரட்டைவிட பச்சை காரட் நல்லது. ஆகவே தினமும் இரண்டு காரட் சாப்பிட்டு வந்தால் நோய் எதிர்ப்புச் சக்தி நன்றாக இருக்கும்.

ஆரஞ்சுச்சாறு அவசியம்!

வைரஸ், கிருமிகளை எதிர்த்துப் போராடுவதற்கு இரத்தத்தில் 'இன்டர்பெரான்' எனும் எதிர்ப்புப் பொருள் சரியான அளவில் உருவாக வேண்டும். அதற்கு 'வைட்டமின் சி' சத்து அதிகம் தேவை. இச்சத்து ஆரஞ்சு, திராட்சை, எலுமிச்சை, தக்காளி, பப்பாளி முதலிய பழங்களிலும், முளை கட்டிய தானியங்கள், முருங்கைக்கீரை, முட்டைக்கோஸ், வெங்காயம் ஆகிய காய்களிலும் நிறைய உள்ளது. மாலை வேளைகளில் இப்பழங்களில் ஒன்றைச் சாறு பிழிந்து சாப்பிட்டால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும்.

உணவுகள்!

வெள்ளைப்பூண்டு நல்லது!

சமையலுக்குப் பயன்படும் பல பொருள்களுள், வெள்ளைப்பூண்டுக்கு மகத்தான மருத்துவக் குணங்கள் உண்டு. உணவை எளிதில் செரிக்க வைப்பதில் தொடங்கி, இதயநோய் வராமல் பாதுகாப்பது வரை, இது பல நன்மைகளைச் செய்கிறது. பண்டைய ரோமானியப் போர் வீரர்கள் போருக்குப் போகும்போதெல்லாம் வெள்ளைப் பூண்டு களி சாப்பிட்டுவிட்டுச் செல்லும் பழக்கத்தை வைத்திருந்ததாக வரலாறு கூறுகிறது. வெள்ளைப்பூண்டில் உள்ள 'அல்லிசின்' எனும் வேதிப் பொருள் உடலின் தற்காப்பு மண்டலத்தைத் தூண்டுவதால், இயற்கையான நோய் எதிர்ப்புச் சக்தி கிடைத்துவிடுகிறது. இவ்வாறு இயற்கையாகக் கிடைக்கும் எதிர்ப்புச் சக்தியானது ஒரு தடுப்பூசி போல செயல்பட்டு, ஆயுள் முழுவதும் நோய்வராமல் பாதுகாக்கிறது.



துத்தநாகச்சத்து தேவை!

உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கு பல சத்துகள் நமக்குத் தேவை என்றாலும், துத்தநாகச்



சத்து மிகவும் இன்றியமையாதது. இச் சத்து திசுக்களை அடிக்கடி புதுப்பித்து வளர்சிதை மாற்றப் பணிகளை ஊக்கு வித்து நோய்க்கிருமிகள் உறுப்புகளை அண்டவிடாமல் பாதுகாப்புத் தருகிறது. இது இறைச்சி, காளான், பால், முட்டை, இறால் மீன், கடல் மீன்கள் மற்றும் பயறுகளில் உள்ளது.

ஈஸ்ட் தெரியுமா?

ரொட்டியில் 'ஈஸ்ட்' எனும் நன்மை செய்யும் நுண்கிருமிகள் அதிகமுள்ளன. இவை மண்ணீரல் மற்றும் கணையச்

சுரப்பிகளைத் தூண்டி அவற்றின் செயல் திறனை ஊக்கப்படுத்துகின்றன. இத னால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது. பால், தயிர், பாலாடை ஆகியவற்றிலும் 'ஈஸ்ட்' அதிக அளவில் உள்ளது.

வைட்டமின் ஈ முக்கியம்!

எலும்பு மஜ்ஜையில் உருவாகின்ற W உயிரணுக்களுக்கு, நோய்க்கிருமிகளை அழிக்கும் திறனுண்டு. இந்த அணுக்கள் அதிகமாக உள்ளவர்களுக்கு நோய் எதிர்ப்புத்திறனும் அதிகமாக இருக்கும். 'வைட்டமின் பி6' மற்றும் 'வைட்டமின் ஈ' சத்துகள் இந்த அணுக்கள் உருவாவதை ஊக்கப்படுத்துகின்றன. பப்பாளி, டர்னிப், பாதாம்பருப்பு, சூரியகாந்தி எண்ணெய் ஆகிய உணவு களில் இச்ச த்துகள் அதிகம். சிறு வயதிலிருந்தே தினமும் மூன்று பாதாம் பருப்புகளைச் ச ாப்பிட்டு வந்தால் நோய் எதிர்ப்புச் சக்தி நன்றாக இருக்கும்.

நார்ச்சத்து எனும் வேர்ச்சத்து!

நம் உடலுக்குள் நோய்க்கிருமிகள் எளிதாக நுழையும் வழி குடல்தான். அந்த நுழைவிடத்தைப் பாதுகாப்பாக வைத்திருந்தால்தான் நோய்கள் நம்மை நெருங்காது. அதற்கு ஒரே வழி உணவில் பழங்கள் மற்றும் காய்கறிகளை அதிகமாக சேர்த்துக் கொள்வதுதான். காரணம், பழங்களிலும் காய்கறிகளிலும் நார்ச்சத்து அதிகமுள்ளது. இது குடலில் உள்ள நச்சுப்பொருள்களை அகற்றி, சுத்தம் செய்து, நோய்க்கிருமிகளுக்கு இடம் தராமல் பாதுகாக்கிறது. கோது மை, கேழ்வரகு, கம்பு போன்ற முழுத் தானியங்களிலும், அவரை, பீட்ரூட், பட்டாணி, காலிபிளவர் போன்ற காய்களிலும் நார்ச்சத்து மிகுந்துள்ளது.

யோகா உதவும்!

உணவு மட்டுமன்றி உடற்பயிற்சி கள் மற்றும் யோகசனப் பயிற்சிகளும் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பல மடங்கு அதிகரிக்கும். நல்ல மனநிலை, மகிழ்வான வாழ்க்கைமுறை, அன்பு, அமைதி, அடக்கம், பொறுமை, மனவலிமை போன்ற நல்ல குணங்கள் உடலின் தற்காப்பு மண்டலத்தை ஊக்கப்படுத்தி நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகப்படுத்தும். ●

வாழ்த்துக்கள்!



பெயரைச் சொல்; பரிசை வெல்-4-ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு, தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :1.மிங்க், 2.கிறிஸ்டியானோ ரொனா ல்டோ, 3.ஆஸ்ப்ரே

பரிசு பெறுவோர் :

1. ஜி.பவன கௌரி, செங்கம் 2.மு.பிரசாந்த், திருப்பூர், 3.கே.ஜெயகலைவாணி, பொழிச்சலூர் 4.எஸ்.கே.அபிஷேக், நெய்வேலி 5.நா.சகுந்தலா, பரமக்குடி 6.எம்.பி.தாமோதர தருண், திருச்செந்தூர் 7.கோ.அக்ஷயா, சென்னை 8.த.பூர்ணிமா, தென்காசி 9.இரா.நந்தகுமார், தஞ்சாவூர் 10.த.வேம்பு, அரியலூர்

உங்கள் கவனத்துக்கு!

- சிறுவர் சங்க உறுப்பினராவதற்குக் குறைந்த பட்சம் ஐந்து வயதாகியிருக்க வேண்டும்.
- பட்டியல் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கூப்பனை (பக்கம் 58) நிரப்பி, புகைப்படத்தை இணைத்து அனுப்புங்கள். (ஜெராக்ஸ் எடுப்பதைத் தவிர்க்கவும்.)



டியர் குட்டீஸ்...

- **சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்பும்போது, அதில் புகைப்படத்தை ஒட்டி அனுப்புங்கள். புகைப்படம் இல்லாமல், அனுப்பப்படும் கூப்பன்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.**
- உறுப்பினர் சங்கத்தில் உங்கள் புகைப்படம் இடம் பெற்றுவிட்டது என்றால், அந்தப் புகைப்படத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட எண்தான் உங்களுடைய உறுப்பினர் எண். எனவே, உறுப்பினர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள், அந்த எண்ணைக் குறிப்பிட்டுத் தங்கள் படைப்புகளை அனுப்பலாம்!
- முதல் வகுப்பு முதல் மேல் நிலைப் பள்ளி வரை பயிலும் அனைவரும் உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற முடியும்.
- இதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.
- நீங்கள் உறுப்பினர் எனில், படைப்புகளை அனுப்பும்போது உங்களுக்கான உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட மறக்காதீர்கள்.
- **ஏற்கெனவே உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற்றவர்கள் மீண்டும் சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்ப வேண்டாம்.**
- உறுப்பினர் அல்லாதவரும் தங்கள் படைப்புகளை எழுதி அனுப்பலாம். சில குறிப்பிட்ட போட்டிகளில், உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.
- **மாணவர்கள் தங்கள் படைப்புகளின் பின்பக்கம், பெயர், வகுப்பு, பள்ளி, ஊர், உறுப்பினர் எண் ஆகியவற்றையும், வீட்டு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்பவும்.**
- **பிறர் எழுதி வெளியான கதை, கட்டுரை, கவிதை... போன்றவற்றை, மீண்டும் உங்கள் பெயரில் எழுதி அனுப்பாதீர்கள். இது மிகத் தவறு.**
- நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை போன்றவை உங்கள் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.

ஆசிரியர், கோகுலம்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32



ஓட்டக்காரன்!

பறவைதான்; ஆனால் பறக்காது என்கிற வகையைச் சேர்ந்தது நெருப்புக் கோழி! ஸ்ட்டுத்தியோ கேம்லஸ் (Stuthio Camelus) என்ற பெயர் கொண்ட நெருப்புக் கோழி, உலகின் மிகப் பெரிய பறவை! ஐந்து வினாடிகளில் 100 மீட்டர் தூரத்தைக் கடக்கும் திறமை உடையது இது. முதிர்ச்சி அடைந்த ஆண் நெருப்புக் கோழி 9 அடி உயரமும், 150 கிலோ எடையும் கொண்டிருக்கும். இதன் ஒரு முட்டை 6 அங்குலம் நீளமும் 1.5 கிலோ எடையும் கொண்டிருக்கும். அதாவது ஒரு முட்டையின் எடை இரண்டு டஜன் கோழி முட்டைகளின் எடைக்கு சமம். 2.56 கிலோ எடை கொண்ட நெருப்புக்கோழி முட்டை, 2007ம் ஆண்டு கின்னசில் இடம் பெற்றது. 115 கிலோ எடையுள்ள ஒரு மனிதன் நெருப்புக் கோழியின் முட்டை மேல் அமர்ந்தாலும் முட்டை உடையாது. அந்த அளவுக்குக் கடினமான ஓடு அமைப்பைக் கொண்டது.

இவற்றால் வேகமாக ஓட முடியுமே தவிர, பறக்க முடியாது. ஆப்பிரிக்காவின் வறண்ட புல்வெளிகளிலும் பாலைவனங்களிலும் இவை



அதிகமாகக் காணப்படுகின்றன. அதிக அளவில் அழிந்து வரும் இனங்களில் இவையும் ஒன்று என்று IUCN அறிவித்துள்ளது. ஒரு கூட்டத்திலுள்ள அனைத்து நெருப்புக் கோழிகளும் ஒரே கூட்டில் 30க்கும் மேற்பட்ட முட்டைகள் இடும். ஆண், பெண் பறவைகள் மாறி மாறி முட்டைகளை அடைகாக்கும். ஒரு முட்டை குஞ்சு பொறிக்க 40 நாட்கள் ஆகும்.

குஞ்சுகளின் வளர்ப்பு முறையை ஆண் பறவைகளே கவனித்துக் கொள்ளும். எதிரிகளைக் கண்டால் இவை தலையை மண்ணில் புதைத்து நிற்கும் என்று சொல்வதுண்டு. ஆனால் அது தவறு! எதிரிகளிடமிருந்து, தன் குஞ்சுகளைக் காப்பாற்ற, காயம்பட்டதுபோல் இவை நடிக்கும். தன்னை விரட்டி வரும் எதிரிகளைத் தாக்கி அதிக தூரம் ஓடச் செய்யும் திறன் கொண்டவை. இந்த நெருப்புக் கோழிகள், தான் ஓடுவது மட்டுமல்ல; எதிரியையும் ஓடச் செய்யும் பலே ஓட்டக்காரன்தான்!

- பி.ராமன்,

உ. எண் 1381, காஞ்சிபுரம்

நத்தையே நத்தையே
அத்தைவீடு பயணமா?
எத்தனைநாள் ஆகுமோ
எமக்கு அதைக் கூறிடு!

வீட்டைச் சுமந்து செல்வதேன்?
வெள்ளி தங்கம் உள்ளதா?
ஓட்டைப் பிரித்து திருடுவார்
என்று ஏதும் அச்சமா?

தலையில் உள்ள ஆண்டெனா
தகவல் அறியும் கருவியா?
காலில் லாத போதிலும்
களைத்திடாமல் செல்கிறாய்.

'உள்ளவற்றை கொண்டுமே
உழைத்துவாழ்க' என்கிறாய்
உள்ளம் தொடும் போதனை;
உணர, வாழ்வு சாதனை!

- எம்.சேக் உசேன், செங்கோட்டை

திசை காக்கும் குணநிதி!

முதல் வணக்கம் பெறுபவர்
முயற்சி வெல்ல அருள்பவர்
பதம் பணிந்த அன்பரின்
பக்கம் நின்று காப்பவர்.

அரச மரத் தடியிலும்
ஆற்றோரம், குளக்கரை
தெருமுனையும் சன்னிதி
திசைகாக்கும் குணநிதி!

பாரதத்தை எழுதினார்
பொன்னி பெருக அருளினார்
வீரவேலன் வள்ளியை
வதுவை கொள்ள உதவினார்!

தும்பிக்கையை காட்டியே,
'துணிவுடனே செயல்படு;
நம்பிக்கையாய் வாழ்ந்திடு'
நாளும் வெற்றி' என்கிறார்.





பிள்ளையாரை வணங்குவோம்
பரமன் மூத்த மைந்தனாம்
வெள்ளை தந்த வேழனை
வணங்கி வாழ்வில் உயருவோம்.

- கல்யாணி பாலு, திருநெல்வேலி

மலரும் நாட்கள்!

இரவு போனது; இருளும் போனது!
பொழுது வந்ததும் பொலிவு வந்தது.

திசைகள் எங்கிலும் தொழில் நடந்தன;
இசைபடித்து புள் இரைக் கலைந்தன.

'காலம் அறியணும்; கடமை புரியணும்;
காலம் அறிந்தவர் நாளும் வெல்கிறார்

'நற்படிப்பு நம்பணி; நாளும் நமக்கணி;
துடிப்பு கூடினால் தொடரும் வெற்றிகள்'!
என்று சொல்வதாய்
மலரும் நாட்களே!
நன்று அறிகுவோம்; நன்மை
அடையுவோம்!

- என்.வந்தனா,
பதினொராம் வகுப்பு,
ஆங்கிலோ இந்தியப் பள்ளி,
திருச்சி



36 கோட்டைகள்!

மத்தியப் பிரதேசத்திலிருந்து பிரிந்து 2000ஆம் ஆண்டு நவம்பர் முதல் தேதி உருவான மாநிலம் சடிஸ்கர். இது, இந்தியாவின் பத்தாவது பெரிய மாநிலம். மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம், ஆந்திரா, ஒரிசா, உத்திரப் பிரதேசம், ஜார்கண்டு ஆகிய மாநிலங்கள் இதைச் சுற்றி அமைந்துள்ளன.

பண்டைக் காலத்தில் இந்தப் பகுதியில் ரத்னாபூர், விஜய்ப்பூர், பாடர்பட்னா, கெண்டா, ராய்பூர், சிரசா என்று மொத்தம் 36 சிற்றரசர்கள் ஆட்சி புரிந்தார்கள் என்கிறது வரலாறு. சத்திஸ் என்றால் முப்பத்து ஆறு. கர் என்றால் கோட்டை, ஆக சத்திஸ்கர் என்றால் முப்பத்தாறு கோட்டைகளைக் கொண்ட பகுதி என்று பொருள்.

வனவாசப் பகுதி!

இன்றைய சடிஸ்கர் பகுதி பழங்காலத்தில் 'தட்சிண கோசலம்' என்று அழைக்கப்பட்டது. வனவாச காலத்தில் ஸ்ரீராமர் இந்தப் பகுதியில்தான் தங்கி இருந்தாராம். கி.பி. பத்தாம் நூற்றாண்டில் இப்பகுதியை ஜபல்பூருக்கு அருகில் இருந்த திரிபுரியைத் தலைநகரமாகக் கொண்டு காளிங்க ராஜா என்ற செடி வம்ச ராஜா ஆட்சி செய்ததாகவும், அவரது பேரன் ரத்ன ராஜா ரத்னாபூர் என்ற புதிய தலைநகரை உருவாக்கி ஆட்சி புரிந்தார் என்றும் தெரிய வருகிறது. அடுத்து இப்பகுதி சாளுக்கியர்களின் கட்டுப்பாட்டுக்கு வந்தது. 18ஆம் நூற்றாண்டில் மராத்திய மன்னர்கள் சடிஸ்கர் பகுதியைக் கைப்பற்றினார்கள். 1818ல் பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

வீரத் திருமகன்!

1857ல் சடிஸ்கர் பகுதியைச் சேர்ந்த சோனாகான் பகுதியின் ஜமீந்தார் வீர் நாராயண் சிங் இந்தியாவின் முதல் சுதந்திரப் போரில் அப்பகுதி மக்கள் பங்கேற்கத் தூண்டுதலாக இருந்தார். சுமார் 500 வீரர்களைத் திரட்டி, பிரிட்டிஷாரை எதிர்த்தார். கடும் சண்டைக்குப்பின், அவரைக் கைது செய்த பிரிட்டிஷ் அரசு தூக்கிலிட்டது. சடிஸ்கரின் வீரத்திருமகனாக இவர் போற்றப்படுகிறார்.

மக்கள் தொகை!

இரண்டு கோடியே 83 லட்சம் பேர் இங்கு வசிக்கிறார்கள். இவர்களில், 20 சதவிகிதம் மட்டுமே நகர்ப்புறங்களில் வசிப்போர். மொத்த நிலப்பரப்பில் 44 சதவிகிதம் வனப்பகுதி. நம் நாட்டின் மொத்த காடுகளில் 12 சதவிகிதம் சடிஸ்கர் மாநிலத்துக்கு உட்பட்டது. மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் வனவாசி இனத்தவர். சடிஸ்கரில் ஆயிரம் ஆண்களுக்கு 990 பெண்கள் என்ற விகிதத்தில் மக்கள் தொகை அமைந்துள்ளது. 65 சதவிகிதம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.

மொழிகள்

சடிஸ்கரை தனி மாநிலமாகப் பிரிக்க



✲சித்ரகூட் நீர்வீழ்ச்சி

வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வந்தது. பலமுறை நிராகரிக்கப்பட்ட இந்த முடிவு, 2000-ல் நிறைவே றியது. மாநில ட்டப் பேரவையில் மொத்தம் 90 எம்.எல்.ஏ.க்கள். பாராளுமன்றத்தின் லோக்சபாவுக்கு அனுப்பி வைக்கப்படும் எம்.பி.க்கள் 11 பேர். ராஜ்யசபாவுக்குச் செல்பவர்கள் 5 பேர். காங்கிரஸ், பா.ஜ.க., பகுஜன் சமாஜ் கட்சி, தேசியவாதக் காங்கிரஸ் ஆகியவை முக்கிய அரசியல் கட்சிகள். தலைநகர் ராய்பூர். மாநில உயர்நீதிமன்றம் பிலாஸ்பூரில் செயல்பட்டு வருகிறது. இங்கு 18 மாவட்டங்கள் உள்ளன. முக்கிய மொழிகள் : சதிஸ்கரி, இந்தி.

ஆறுகள்

இந்திராவதி, பைரி, ஹஸ்தோ, சோன், சபரி ஆகிய நதிகள் இங்கு பாய்ந்தாலும், முக்கியமானது மகாநதி. இதில் கட்டப்பட்டுள்ள பெரிய மற்றும் சிறிய அணைகளால் மாநிலம் நல்ல நீர்ப்பாசன வசதி பெற்றுள்ளது. 'மத்திய



கௌதம் ராம்

இந்தியாவின் நெற்களஞ்சியம்' என்ற சிறப்பும் இதற்கு உண்டு.

போக்குவரத்து

மாநிலத்தின் இரு முக்கியமான பெரிய ரயில் நிலையங்கள் ராய்ப்பூர் மற்றும் பிலாஸ்பூர். 11 முக்கிய தேசிய நெடுஞ்சாலைகள் சடிஸ்கரின் வழியே செல்கின்றன. தரைவழிப் போக்குவ ரத்தில் ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளபோதிலும், வான் வழிப் போக்குவரத்து பின் தங்கிய


✱ மகாமாயா கோவில் ரத்னாபூர்

நிலையில்தான் உள்ளது. மாநிலத்தில் உள்ள ஒரே விமான நிலையம் தலைநகரான ராய்பூரில்தான்.

தொழில்

முக்கிய தொழில் விவசாயம். 80 சதவிகிதம்பேர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். நெல், கோதுமை, சோளம், நிலக்கடலை, எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகள் முக்கிய விளைபொருட்கள். நாட்டின் மொத்த இரும்பு எஃகு மற்றும் சிமெண்ட் உற்பத்தியில் 20 சதவிகிதம் இம்மாநில பங்களிப்பாகும். இரும்புத்தாது, நிலக்கரி, சுண்ணாம்புக்கல், பாக்சைட் போன்றவை அபரிமிதமாக இங்கு கிடைக்கின்றன. பிலாய் இரும்புத் தொழிற்சாலை, தேசிய தெர்மல் பவர் கார்ப்பரேஷன், பால்கோ போன்றவை இங்குள்ள முக்கியத் தொழிற்சாலைகள்.

சுற்றுலா

ஏராளமான சுற்றுலாத்தலங்களை கொண்டது சடிஸ்கர். ஜகதால்பூரில் உள்ள சித்ரகூட் நீர்வீழ்ச்சி வசீகரமானது. இது குதிரை லாட வடிவில் அமைந்துள்ளது. தொன்மை வாய்ந்த பௌத்த சமயக்கோவில் உள்ள இடம் மலார். குஜராத்தியர்களுக்கு புனிதமான ஸ்ரீ வல்லபாச்சார்யா பிறந்த ஊர் சம்பரன். பாஸ்தர், திரத்கர் நீர்வீழ்ச்சி, கேஷ்கல் பள்ளத்தாக்கு, காங்கேர்காட் தேசியப் பூங்கா, கைலாஷ் குகைகள், ரத்னாபூரில் உள்ள மகாமாயா கோவில், உதண்டி வனசரணாலயம் போன்றவை இதர முக்கிய சுற்றுலாத்தலங்களாகும்.

கலாசாரம்

'கோசா' சடிஸ்கருக்கே உரிய பிரத்யேக பட்டு ரகம். மாநிலத்தின் கலாசார நடன வகைகள்: பந்தி, சௌவா ஆகியவை. ரவுட் நசா என்பது மாடு மேய்ப்பவர்களின் கிராமிய நடனம். சோஹர், பிஹாவ், பதோனி ஆகியவை இசை வகைகள். பாண்டவானி என்பது இசை நாட்டியக்கலை. கடந்த சில ஆண்டுகளாக, மாவோயிஸ்டுகள் என அழைக்கப்படும் நக்சலைட் தீவிரவாதிகள் பிரச்னையால் பெரும ளவில் பாதிக்கப்பட்டு வரும் இந்திய மாநிலங்களுள் சடிஸ்கரும் ஒன்று. ●



பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்கவேண்டும். உள்ளூர்க் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032

"டாக்டர், டாக்டர்..."

பரபரப்பாக ஓடிவந்தவர்கள் டாக்டர் ஜேம்ஸ் லிண்டைப் பார்த்ததும் கூவலாய்ச் சொன்னார்கள். "கப்பல்ல இன்னொருத்தருக்கும் அதே வியாதி டாக்டர்."

"ஸ்கர்வியா?"

டாக்டர் ஜேம்ஸ் பெருமூச்சுடன் எழுந்தார். எத்தனை மருந்து கொடுத்து என்ன? அந்த 'ஸ்கர்வி' அரக்கனை அழிக்கமுடியவில்லையே!


அந்தக் காலத்தில் அநேகமாக எல்லாக் கப்பல்களையும் 'ஸ்கர்வி' என்கிற வியாதி ஆக்கிரமித்திருந்தது. பயணிகள், மாலுமிகள், உதவிப் பணியாளர்கள் என ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரும் அந்த நோயின் தாக்குதலால் அவதிப் பட்டார்கள்.

'ஸ்கர்வி' நோய் கொண்டவர்களை வெறும் பார்வையிலேயே அடையாளம் கண்டுவிடலாம். முகம் வெளுத்துப் போயிருக்கும், ஒன்றிரண்டு பற்கள் பறிபோயிருக்கும், ஈறுகளில் ரத்தம் வடியும். அதீத களைப்பு, சோர்வில் முடங்கிக் கிடப்பார்கள்.

இதற்கு என்ன மருந்து?

அதுதான் யாருக்கும் தெரியவில்லை.

கப்பலில்



விதவிதமான மாத்திரைகள், களிம்புகள், கஷாயங்கள் என்று போராடிப் பார்த்துவிட்டார்கள்; எந்தப் பலனும் இல்லை.

லிண்ட் வெறுப்பின் உச்சத்தில் இருந்தார். மருந்துக்கு அடங்காத வியாதியா? அப்படி ஒன்று உண்டா?

அப்போது, அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. அதாவது, ஸ்கர்வி நம் உடலில்




உள்ள ஏதோ ஒரு பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு வளர்கிறது என்று அவருக்குச் சந்தேகம். அதற்கு இடம் தராமல் மனித உடம்பின் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பலப்படுத்த வேண்டும், என்ன செய்யலாம்?

அப்போது 'சலிஸ்பரி' என்ற கப்பலில் அவர் மருத்துவராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். மற்ற பல கப்பல்களைப்போலவே, இங்கேயும் ஸ்கர்வியின் ராஜ்ஜியம்தான் . ஆகவே, அவர் சின்னப் பரிசோதனை செய்யத் தீர்மானித்தார். இதற்காக, ஸ்கர்வியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பன்னிரண்டு பேரை தேர்ந்தெடுத்தார்.

இன்னொரு குழுவுக்கு ஆரஞ்சும் எலுமிச்சையும் தந்தார்கள்... இப்படியே ஆறு குழுக்களின் சாப்பாட்டிலும் வெவ்வேறுவிதமான உணவுப் பொருள்களைக் கலந்து தருவதற்கு ஏற்பாடு செய்திருந்தார் லிண்ட்.

கலவரம்



இவர்களை ஆறு குழுக்களாகப் பிரித்தார். ஒவ்வொரு குழுவிலும் இரண்டு பேர். இவர்களை வைத்துக் கொண்டுதான், 'ஸ்கர்வி'க்கு முடிவு கட்டவேண்டும் என்று அவர் தீர்மானித்திருந்தார். ஆறு குழுக்க ளுக்கும், வெவ்வேறுவிதமான உணவுப் பொருள்களைத் தேர்வு செய்திருந்தார். வழக்கமான தினசரிச் சாப்பாட்டுடன், இந்தப் பொருள்களும் அவர்களுக்குக் கலந்து தரப்பட்டன.

உதாரணமாக, ஒரு குழுவைச் சேர்ந்த இருவரின் சாப்பாட்டில், பூண்டும் கடுகும் கலக்கப்பட்டிருந்தன. அடுத்த இருவருக்கு, சாப்பாட்டுடன் சில தேக்கரண்டி வினிகர் கலந்தார்கள்,

இதைப் பார்த்த மற்றவர்கள், லிண்டைக் கேலி செய்தார்கள், 'வியாதி வந்தவர்களுக்கு மருந்து கொடுக்காமல், சாப்பாட்டை மாற்றிக்கொண்டிருக்கிறார். இதென்ன கூத்து?' லிண்ட் இதைக் கண்டுகொள்ளவில்லை. தனது பரிசோ தனையைத் தொடர்ந்தார்.

சில நாட்களுக்குப்பிறகு, முதல் பத்துப் பேருடைய உடல்நிலையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஆனால் அந்தக் கடைசி இரண்டு பேர், கொஞ்சம் கொஞ்சமாகத் தேற ஆரம்பித்தார்கள்.

இறுதியாக, அவர்கள் ஸ்கர்வியின் பாதிப்புகளில் இருந்து முழுமையாகக்

என். சொக்கன்

குணமடைந்தார்கள். லிண்ட்க்கு உற்சாகம் தாங்கவில்லை.

மற்றவர்களுக்கும் ஆச்சர்யம்தான். ஸ்கர்வி நோய் கண்டவர்கள், எந்த மருந்து, மாத்திரையும் சாப்பிடாமல், குணமடைந்ததை வியப்புடன் பார்த்தார்கள்.

காரணம், அவர்களைக் காப்பாற்றியது மருந்து, மாத்திரைகள் இல்லை, தினந்தோறும் கொஞ்சம் ஆரஞ்சு, கொஞ்சம் எலுமிச்சை ரசம். அவ்வளவுதான்; அவ்வளவேதான்!

காய்கறி, பழம் சாப்பிட்டால் உடம்புக்கு நன்மை என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் 'ஸ்கர்வி'போன்ற ஒரு கொடிய நோயின் பாதிப்பு, இந்தப் பழங்களால் குறைந்து காணாமல் போய்விடும் என்பதை, அப்போதுதான் முதன்முறையாகப் பார்த்தார்கள்.



● ஜேம்ஸ் லிண்ட்

தம் பரிசோதனை வெற்றியடைந்தவுடன், டாக்டர் லிண்ட் இதுபற்றி நிறையப் பேச ஆரம்பித்தார், 'மனித உடலுக்குத் தேவையான சில சத்துகளை, உணவுப் பொருள்களின் வழியே கொடுத்து வந்தால், ஸ்கர்வி போன்ற பல பற்றாக்குறை நோய்களைத் தீர்த்து விடமுடியும். மருந்துகள் தேவையில்லை.'

அவருடைய கருத்துகளைப் பலர் ஏற்றுக்கொள்ளவில்லை. 'சுத்த முட்டாள் தனம்' என்று விமர்சித்தார்கள். ஒழுங்காகச் சாப்பிட்டாலே நோய் சரியாகிவிடும் என்கிற சிந்தனையைப் பலரால் ஜீரணிக்கக்கூட முடியவில்லை.

ஆகவே, அவரது கண்டுபிடிப்பு நிராகரிக்கப்பட்டது. ஆனால், கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டுகளுக்குப்பிறகு அவர் சொன்னது உண்மை என உலகம் புரிந்துகொண்டது. 'சிட்ரஸ் பழங்கள்' என்று அழைக்கப்படும் எலுமிச்சை, ஆரஞ்சு போன்றவற்றில் இருந்து பெறப்படுகிற 'வைட்டமின் சி'தான் ஸ்கர்வி நோய்க்குச் சரியான மருந்து என்று ஆதாரபூர்வமாக நிரூபிக்கப் பட்டது.

இன்றைக்கு, 'ஜேம்ஸ் லிண்ட்'பற்றி அதிகப் பேருக்குத் தெரியாது. ஆனால், அவர் சொன்ன 'வைட்டமின்'களின் மகத்துவத்தை எல்லோரும் புரிந்து கொண்டுவிட்டார்கள்.

மருத்துவர்கள் நன்கு பழக்கப்பட்ட மருந்துகளை மட்டுமே நோயாளிகளுக்குக் கொடுத்துக் குணப்படுத்தி வந்திருந்தால், நம்மைத் தாக்கும் புதிய நோய்களுக்கு வைத்தியம் தெரியாமலே போயிருக்கும்.

சரித்திரம் முழுவதும், ஜேம்ஸ் லிண்ட் போன்ற மருத்துவர்கள், அறிவியலாளர்கள், புது விஷயங்களைப் பரிசோதனை செய்து பார்க்கிற துடிப்பு கொண்டவர்கள் நிறைந்திருந்தார்கள்; இப்போதும் இருக்கிறார்கள். அவர்களுடைய முனைப்புதான், சுற்றும் இந்தப் பூமிக்கு ஆதாரமாக இருக்கிறது. ●



* இவர் 1766ல் செப்டம்பர் 6ம் தேதி இங்கிலாந்தில் ஈகிள்ஸ் ஃபீல்டு என்ற இடத்தில் பிறந்தவர்.
* வேதியியல் மற்றும் இயற்பியல் அறிஞர்
* அணுக் கொள்கையை உருவாக்கியதன் மூலம் நவீன அறிவியலின் முன்னோடிகளில் ஒருவராக மதிக்கப்படுபவர்
* பள்ளி ஆசிரியராகவும், பின்னர் கல்லூரியில் விரிவுரையாளராகவும் பணி புரிந்தவர்.
* 'வளி மண்டலத்தில் ஏற்படும் வெப்ப மாறுபாடுகளாலேயே மழை பெய்கிறது' என்ற கொள்கையை முதன் முதலில் உறுதிப்படுத்தியவர்.
* நிறக்குருடு தன்மை தொடர்பான ஆய்வுகளிலும் ஆர்வம் கொண்டிருந்தவர்.
* பச்சை நிறத்தை உணர முடியாத வகையில் பார்வைக்குறைபாடு இவருக்கு.
* வாயுக்கள் தொடர்பான உண்மை ஒன்றை வெளிப்படுத்திய இவரது கொள்கை 'டால்டன் விதி' எனப்படுகிறது.
* திருமணமே செய்து கொள்ளாத இவர், இறுதிக்காலத்தில் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தார்.
* 1844 ஜூலை 27அன்று இவர் இயற்கை எய்தினார்.



விடை: ஜான் டால்டன் (John dalton)

மழைக்குக் காரணம்..?



இவர் யார்?

- ஜி.எஸ்.சபரி,
உ. எண் 1475, கோபி



காால் உண்டு; நடக்க முடியாது என்று விடுகதையாகச் சொன்னால், நாற்காலி முக்காலி என்றுதான் சொல்வோம். ஆனால், துருவப் பகுதிகளில் வாழும் சீல்களும் இப்படித்தான். ஹார்பர் சீல் (harbor Seal), சீல் (elephant seal); வாலரஸ (walrus) என்று இதில் பல வகைகள் உண்டு. திமிங்கலத்துக்கு அடுத்த, மிகப் பெரிய பாலூட்டி யானை சீல்'தான். இவை சுமார் இருபது அடி நீளமும், மூன்று டன் வரை எடையும் கொண்டிருக்கும்.

நான்கு கால்களைப் பெற்றுள்ளன சீல்கள். என்றாலும், அவையே

தத்தித் தவழும் துருவ ராஜா



– ஜி.எஸ்.ஸ்ரீமதி,
உ. எண் 1382, கோபி



சதைப்பற்றுடன் கூடிய துடுப்புகளாகப் பயன்படுகின்றன. அதனால், நீரில் வெகு நன்றாக நீந்தும் சீல்கள், நிலப்பகுதிக்கு வரும்போது வயிற்றுப் புறத் தசைகளை சுருக்கி நீட்டுவதன் மூலம் தத்தித் தவழ்ந்து செல்கின்றன. பனிப் பகுதிகளில், குளிரினால் பாதிக்கப்படா திருக்க, இவற்றின் தோலுக்கு கீழே கொழுப்பு சேமிக்கப்பட்டிருக்கும். இந்த அடுக்கு, குளிர் தாக்காவண்ணம் பாதுகாக்கிறது. தவிர, தோலில் காணப்படும் ரோமங்களும், குளிரைத் தடுக்கின்றன.

கடல் சிப்பி, கணவாய் உள்ளிட்ட மீன்கள் ஆகியவற்றை உணவாக்கிக் கொள்கின்றன சீல்கள். இவற்றுக்குக் கூர்மையான பற்கள் உண்டு. என்றாலும், அவை உணவை மெல்லுவதற்குப் பயன்படாது. உணவைக் கிழிக்கவும், இழுக்கவுமே அவை உதவும். எனவே, தாம் பற்றிய இரையை அப்படியே விழுங்கும் இயல்புடையவை.


பாலூட்டி இனத்தைச் சேர்ந்த இவை, ஒவ்வொரு முறையும் ஒரு குட்டியையே ஈனும். வயிற்றில் குட்டி இருக்கும் காலம், எட்டு முதல் பன்னிரண்டு மாதங்கள். இவற்றில் யானை சீல் தம் எதிரியிடம் இருந்து தப்பிக்க விநோத மான தந்திரம் ஒன்றைச் செய்கிறது:

யானை சீல்களில், ஆண் சீலுக்கு மூக்குப் பகுதி சதைப் பற்றுடன் நீண்ட மாதிரி அமைந்திருக்கும். யானையின் துதிக்கை போல் அவை நீண்டு அமைந்த காரணத்தாலேயே. இவற்றுக்கு இந்தப் பெயர் உண்டானது. அச்சம் ஏற்பட்டாலோ, எதிரியைக் கண்டாலோ, இந்தச் சதைப் பகுதியை பலூன் போல பருக்கச் செய்துவிடும் ஆண்சீல்! சிவப்பு நிறத்தில் விநோதமாகப் பருத்து விளங்கும் அந்தத் தோற்றத்தைக் கண்டதும், எதிரி மிரண்டு ஓடும்.

கூட்டம் கூட்டமாக வாழும் இயல்புடையவை இவை. இவற்றின் கூட்டத்தை ஆங்கிலத்தில் காலனி (colony) என்று சொல்வார்கள். ●

பட்டுப்புழுவின் பதில்!


கதை: வி.எஸ். கார்த்திக். கோபி
படம்: பிள்ளை



கோகுலம்
டைஜஸ்ட்



இந்த டைஜஸ்டில்...




நம்பிக்கை!

மூதறிஞர் ராஜாஜியைப் பார்க்க, தம் மகனுடன் வந்தார் ஒருவர். அவர் ராஜாஜியிடம், 'இவன் பி.எஸ்.ஸி படிச்சிருக்கான். நீங்க ஒரு வார்த்தை சொன்னால் இவனுக்கு வேலை கிடைத்துவிடும். அதனால்தான் அழைத்து வந்தேன்' என்றார்.

அதைக் கேட்ட ராஜாஜி, அந்தப் பையனைத் தம்மருகே அழைத்துச் சொன்னார்: ''இனிமே எங்கயாவது வேலை தேடிப் போகணும்னா, உன் அப்பாவைக் கூட அழைத்துக் கொண்டு போகாதே. அவருக்கு உன் மீதோ, உன் படிப்புலயோ, திறமையிலோ நம்பிக்கை கிடையாது. சிபாரிசு தேடறார். அதுக்குப் பதிலா, அந்த அதிகாரி கிட்டே நேரே போய் உன்னோட படிப்பையும், திறமையையும் சொல்லு. தானா வேலை கிடைக்கும். அவர் மாட்டேன்னு சொன்னாலும், மனசு தளராதே. அடுத்தடுத்து முயற்சி பண்ணு. கிடைக்கும். தைரியமும், தன்னம்பிக்கையும்தான் முக்கியம். சிபாரிசு இல்லை.'' அதைக் கேட்ட அந்தப் பையனின் முகம் பொலிவு பெற்றது.

- எம். மிருணாளினி, உ.எண்.1567,
அம்மாபட்டி.






வெளிநாட்டிலிருந்து பத்திரிகை நிருபர் ஒருவர் மகாத்மா காந்தியைப் பேட்டி காண வந்திருந்தார். அவரை மிகுந்த மரியாதையுடனும், மகிழ்வுடனும் வரவேற்ற மகாத்மா, அவர் கேலியாகக் கேட்ட கேள்விகளுக்கும் பொறுமையாகப் பதிலளித்தார். ஆனாலும், அந்த நிருபர் தம் கேலியை நிறுத்தவில்லை.தொடர்ந்து கேட்டார்: "உங்களுடைய அகிம்சைக் கொள்கையின் மூலமாக, பேரதிகாரம் மிகுந்த இங்கிலாந்திடம் இருந்து இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்துவிடும் என்று நம்புகிறீர்களா?"

காந்தி துளியும் கோபம் காட்டாமல் சொன்னார்: "இங்கிலாந்து சுதந்திரம் தருவது இருக்கட்டும். சூரியனின் ஒளியை எவ்வளவு கரங்களைக் கொண்டு மூடினாலும், அதை மறைத்துவிட முடியாது. அகிம்சைக்கொள்கையும் இந்தியாவும் அதைப் போன்றவைதான்!"

அந்த பதிலைக் கேட்ட நிருபர், தம் அகந்தையை விலக்கி மகாத்மாவிடம் மன்னிப்புக் கேட்டார்.

- எஸ். வினீத் மாதவன்,
உ.எண் 1196, மதுரை.



மனிதன்!

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் ரயிலில் பயணித்துக் கொண்டிருந்தார். அப்போது அவருக்கு இருபுறமும் வெளிநாட்டுக்காரர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் சுவாமிஜிக்கு ஆங்கிலம் தெரியாது என நினைத்துக் கேலி செய்ய ஆரம்பித்தனர். முதலாமவன் சொன்னான்: 'இவன் ஒரு பன்றி!'. அதைக் கேட்டுச் சிரித்த அடுத்தவன் சொன்னான்: ' இவன் ஒரு கழுதை!'.

இருவரின் பேச்சையும் பொறுமையாகக் கேட்ட விவேகானந்தர் சொன்னார்: 'இந்த இரண்டுக்கும் நடுவே நான் அமர்ந்திருக்கிறேன்!'. அதைக் கேட்ட வெளிநாட்டுக்காரர்கள் இருவரும் வெட்கித் தலைகுனிந்தனர்.

-பி. சர்வேஸ்வரன்,
உ.எண்.456, மதுரை



எண்ணிப் பார்க்கலாம் வா?

I **ப**ள்ளியில் உல்லாசப் பயணம் சென்றவர்களுக்கு, காலை டிபனாக ஆளுக்கு 4 இட்லி வீதம் வாங்கினார்கள். கடைசி நேரத்தில் 10 பேர் வரவே, ஆளுக்கு 3 இட்லியாகச் சாப்பிடக் கொடுத்தார்கள். அடுத்து, அவர்கள் 3 இட்லி போதவில்லை; பசிக்கிறது என்று ஒரு தார் வாழைப்பழத்தை வாங்கி வந்து, ஆளுக்கு ஒரு பழமாகச் சாப்பிட்டார்கள். அப்படியானால் அதில் இருந்த வாழைப்பழங்கள் எத்தனை?

- எம்.மிருணாளினி,
உ. எண் 1567, மதுரை

II **ரா**மு தன் நண்பன் சோமுவிடம், தான் மாதாந்திரத் தேர்வில், எடுத்த

சமூக அறிவியலில் பெற்ற மதிப்பெண்கள் = x என்க.

∴ தமிழில் பெற்ற மதிப்பெண்கள் = $x + 20$

ஆங்கிலத்தில் பெற்ற மதிப்பெண்கள் = $(x + 20) + 20 = x + 40$

அறிவியலில் பெற்ற மதிப்பெண்கள் = $(x + 20 + 20) + 20 = x + 60$

இப்போது, $x + x + 20 + x + 40 + x + 60 = 260$; அதாவது $4x + 120 = 260$

$4x = 260 - 120 = 140$

$x = 140/4 = 35$.

சமூக அறிவியலில்35 தமிழ் = 55, ஆங்கிலம் = 75, அறிவியல் = 95

III. மாலினியிடம் இருந்த பணம் x என்று கொள்வோம். அப்பா ரூ.48 கொடுத்தவுடன், $x + 48$ ஆகும். அக்கா வாங்கியது $= x + 48 / 2$

இப்போது மாலினியிடம் இருப்பது $= 2x$

அதாவது, $x + 48/2 = x$ $x + 48 = 4x$; $3x = 48$; ∴ $x = 16$

∴ மாலினியிடம் முதலில் இருந்த பணம் = ரூ.16 ஆகும்.

IV. அனைத்தும் சரி

மதிப்பெண்களை இப்படிச் சொன்னான்: 'கணிதத்தில் 100 மதிப்பெண்கள்; தமிழில் சமூக அறிவியல் மதிப்பெண்ணை விட 20 அதிகம். ஆங்கிலத்தில் தமிழை விட 20 மதிப்பெண்கள் அதிகம். அறிவியலில் ஆங்கிலத்தை விட 20 மதிப்பெண்கள் அதிகம். மொத்த சராசரி மதிப்பெண் 72சதவிகிதம். அப்படி என்றால் ஒவ்வொரு பாடத்திலும் எடுத்த மதிப்பெண்களைக் கண்டுபிடித்துக் கொள்' என்றான். உங்களுக்குப் புரிகிறதா?

– பி.சர்வேஸ்வரன்,
உ. எண் 456, மதுரை

III **ஊ**ரிலிருந்து வந்த தனது பெரியப்பாவிடம் மாலினி, "பெரியப்பா! நான் ஒரு புதிர் போடுகிறேன். விடை சொல்கிறீர்களா?" என்று சொல்ல ஆரம்பித்தாள். "நான் கொஞ்சம் ரூபாய் வைத்திருந்தேன். அப்பா என் பிறந்த நாளுக்கு 48 ரூபாய் கொடுத்தார். என்னிடத்தில் இருந்த மொத்தப் பணத்தில் சரி பாதியை என் அக்கா வாங்கிக் கொண்டாள். இப்போது என்னிடம் நான் வைத்து இருந்த ரூபாய் போல இரண்டு மடங்கு இருக்கிறது. அப்படி என்றால் முதலில் என்னிடம் எவ்வளவு ரூபாய் இருந்தது?"

– எஸ்.வினித் மாதவன்,
உ. எண் 1196, மதுரை



IV **கீ**ழே கொடுக்கப் பட்டுள்ளவற்றைக் கவனமாய்ப் பாருங்கள்; இந்த விடை சரியா என்று சொல்லுங்கள்.


111/1+1+1 = 37
222/2+2+2 = 37
333/3+3+3 = 37
444/4+4+4 = 37
555/5+5+5 = 37
666/6+6+6 = 37
777/7+7+7 = 37
888/8+8+8 = 37
999/9+9+9 = 37

– பி.ஸ்ரீதேவி, ஆறாம் வகுப்பு,
கே.எம்.கே. மேல்நிலைப் பள்ளி,
காரைக்கால்


I. x பேருக்கு முதலில் இட்லி வாங்கப்பட்டது எனில், இறுதியில் சாப்பிட்டவர்கள் $x+10$. $4x = (x+10) \times 3$ முதலில் வந்தவர்கள் = 30 பேர். அடுத்து வந்த 10 பேர்களைச் சேர்த்தால் (30+10) 40 மாணவர்கள். ∴ தாரில் இருந்த பழங்கள் = 40

II. சராசரி மதிப்பெண் = 72%
மொத்த மதிப்பெண்கள் 5 பாடங்களில் = 5 x 72 = 360
கணிதத்தில் பெற்ற மதிப்பெண்கள் = 100
∴ மீதி 4 பாடங்களில் பெற்ற மதிப்பெண்கள் = 360 - 100 = 260






சுட்டீஸ் கைவண்ணம்!




அனிருத், சின்மயா வித்யாலயா, நாகை




ஸ்ரீ ராம்நாத், உ. எண் 407, சென்னை




அரவிந்தன், நப்பின்னை மெட்ரிகுலேஷன் பள்ளி, செஞ்சி



ஸ்ரீ பாலாஜி, சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி, செஞ்சி



வர்ஷினி, பக்தவத்சலம் வித்யாலயம், சென்னை



முகிலன், செட்டிநாடு வித்யா மந்திர், கரூர்





● ஆக்டோபஸ்

● சிவப்பிந்தியர்



வெள்ளைத் தோல்!

எட்டு கால்களைக் கொண்ட கடல்வாழ் உயிரினம் ஆக்டோபஸ். இவற்றில் சுமார் 300 வகை கண்டறியப்பட்டுள்ளன. என்றாலும், நீல வளையங்களைக் கொண்ட ஆக்டோபஸ் (Blue ringed octopus) மனிதர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியது. 'ஆக்டோ' என்ற ரோமானிய மொழிச் சொல்லுக்கு 'எட்டு' என்று பொருள். அதன் அடிப்படையில் 'ஆக்டோபஸ்' என்று இதற்குப் பெயர் வந்தது.

டார்ஜான் என்றவுடன், அடர்த்தியான ஆப்பிரிக்கக் காடுதான் நினைவுக்கு வரும். இங்கிலாந்தைச் சேர்ந்த எட்கார் ரைஸ் பர்ரோ (Edgar Rice Burrough), உருவாக்கிய கற்பனைப் பாத்திரம்தான், இந்த டார்ஜான். வெள்ளை இனத்துப் பெற்றோருக்குப் பிறந்த குழந்தை, சூழ்நிலையால் ஆப்பிரிக்காவில் வளர்கிறது. அந்தக் குழந்தைக்கு அங்கு வசித்தவர்கள் வைத்த பெயர் டார்ஜான். அதற்கு 'வெள்ளைத் தோல்' (white skin) என்று பொருள்.

அமெரிக்காவின் ஆதிவாசிகளுக்குச் சிவப்பிந்தியர்கள் (Red Indians) என்று பெயர். அமெரிக்காவை முதலில் கண்டுபிடித்தவர்கள் அதனை இந்தியா என்றுதான் நினைத்தார்கள். ஆனால், இந்தியா கண்டறியப்பட்ட பின், இங்கிருந்தவர்கள் கறுப்பு நிறத்தில் காணப்பட்டதால், அமெரிக்காவில் இருந்தவர்களுக்குச் சிவப்பிந்தியர்கள் என்று பெயர் ஏற்பட்டது! மற்றபடி, இந்தியாவுக்கும் அந்தப் பெயருக்கும் எந்தத் தொடர்புமில்லை.

- ஜி.எஸ்.சபரி, உ. எண் 1475, கோபி



டார்ஜான்

வண்ண மயமாக பூத்துக் குலுங்கின மலர்கள். அதைப் பார்க்கும்போது, அந்த மலையே மலர்க்குவியலால் ஆனது போலத் தோன்றியது அவனுக்கு. 'எவ்வளவு அழகாக இருக்கிறது, பார்க்க? ஆனால், அப்பா அனுப்ப மாட்டாரே?' நீண்ட அவன் யோசனையைக் கலைத்தது அப்பாவின் குரல்!

''என்ன மாறா, அந்தப் பூக்களைப் பறித்துவர வேண்டும் என்ற உன் ஆசை இன்னும் மாறவில்லையா?''. அதைக் கேட்ட மாறன், ஒரு கணம் திகைத்தான். ''ஆமாம். அந்த மலர்களைக் கொண்டு, பலரின் நோய்களைக் குணப்படுத்தலாம் என்று சொன்னீர்களே.''

ஒருகணம் மௌனித்த அவன் அப்பா சொன்னார்: '' அந்த மலையில் இருக்கும் சூனியக்காரி மிகவும் ஆபத்தானவள். அங்கே செல்பவர்களை, தன் உணவாக்கிக்கொள்வாள். அதனால்தான் பயப்படுகிறேன்''.

மாறன் மீண்டும் மீண்டும் கேட்டான். எனவே, அவனிடம் மூன்று குச்சிகளைக் கொடுத்த அவர், '' இவை மந்திரக் குச்சிகள். உனக்கு ஆபத்து ஏற்பட்டால், பயன்படுத்திக் கொள்,'' என்று சொல்லி, அவனை அனுப்பி வைத்தார்.

கையில் ஒரு கூடையுடன் கிளம்பிய மாறன், விரைவில் மலையடிவாரத்தை அடைந்தான். அங்கிருந்த மலர்களைப் பறித்து, வேகமாகக் கூடை

மந்திரக் குச்சிகள்!





யில் சேகரித்துக் கொண்டிருந்தான். அப்போது, அவன் முன்பு தோன்றினாள் சூனியக்கிழவி.

"என்னுடைய இடத்துக்கே வந்து விட்டாயா? இன்றைய உணவு நீதான்!" என்றபடியே, தன்னுடைய குகைக்குள் மாறனை இழுத்துச் சென்றாள். திடீரென்று அவளைக் கண்டதால் திகைத்த மாறன், சுதாரித்தான். அப்பா கொடுத்த குச்சிகளில் ஒன்றை எடுத்து, "நான் அடிவாரத்துக்குப் போக வேண்டும்," என்று சொல்லி வீசினான்.

மறுகணம், அவன் பூப்பறித்த அதே இடத்தில் இருந்தான். இதை எதிர்பார்க்காத சூனியக்கிழவி, துரத்த ஆரம்பித்தாள். மாறன் வேகமாக ஓடினான். அவளும் துரத்தினாள். மாறன் அடுத்த குச்சியை எடுத்தான். "பெரிய மணல் மலை தோன்றி அவளைத் தடுக் கட்டும்," என்று வீசினான். அப்படியே மலை தோன்றி அவளைத் தடுத்தது. இன்னும் கொஞ்ச தூரம்தான். வேகத்தை அதிகரித்தான் மாறன். அதற்குள், நெருங்கிவிட்டாள் அவள். கடைசிக் குச்சியை எடுத்து வீசியவன், "பெரிய ஆறு உண்டாகி இவளைத் தடுக்கட்டும்,"என்றான். அப்படியே ஆயிற்று.

வீட்டுக்குள் நுழைந்த மகனைப் பார்த்தார் தந்தை. அவனை, அங்கிருந்த ஒரு பானைக்குள் ஒளிய வைத்தார். துரத்தி வந்த சூனியக்காரி, "எங்கே அவன்? என்னிடம் அவனை ஒப்படைக்காவிட்டால், உன்னையும் அழித்து விடுவேன்!" என்று மிரட்டினாள்.

அதைக் கேட்ட மாறனின் தந்தை பயந்தவர் போலச் சொன்னார்: "என்னை ஒன்றும் செய்து விடாதே. நான் சொல்லி விடுகிறேன். அதற்குமுன் என்னுடைய ஆசையை நிறைவேற்று." 'என்ன?' என்று கேட்டாள் அவள்.

"உன்னுடைய ஆற்றலை நான் பார்க்க வேண்டும்" என்றார் அவர். உடனே, பல பனைமர உயரத்துக்கு வளர்ந்தாள் அவள். வியந்த அவரிடம், "இதற்கே வியந்தால் எப்படி? இப்போது பார்," என்றபடியே, சிறு எறும்பு அளவுக்குக் குறுகினாள். மறுகணம், காலை உயர்த்திய அவர், சட்டென்று அவளைத் தரையோடு தரையாகத் தேய்த்தார்.

அவள் மாண்ட மறுகணமே, அங்கே நோயுற்றிருந்த பலரும் குணமடைந்தார்கள். 'தங்கள் நோய்க்குக் காரணமாயிருந்தவள் அவள்தான்' என்பதும் அப்போதுதான் அவர்களுக்குப் புரிந்தது. மாறனையும் அவன் தந்தையையும் எல்லோரும் பாராட்டினார்கள்.

– அ. அருண்பாலாஜி, உ.எண்.1651, கும்பகோணம்



மழை பெய்யும்போதும், இடி இடிக்கும் போதும் பொட்டல் வெளியில் நிற்கக் கூடாது; மரத்தின் கீழ் நிற்கக் கூடாது. மின்னல் தாக்கும் என்றெல்லாம் சொல்லப்படுவது ஏன்?

நமது உடலுக்கு, மின்னலை ஈர்க்கும் சக்தி உண்டு. உதாரணமாக, ஐந்தடி உயரம் உள்ள ஒருவரின் உடலுக்கு - அதன் ஆறு மடங்கு, அதாவது முப்பதடி தூரத்துக்கு மின்னலை ஈர்க்கும் திறன் உண்டு.

அதேபோல, மரங்களின் கீழே நிற்பதாலும், கையில் குடையோடு நிற்பதாலும், வாகனங்கள் மற்றும் கட்டிடங்களின் மீது நிற்பதாலும் இந்த ஆபத்து அதிகப்படும். அதனால்தான், இப்படிச் சொல்கிறார்கள். இது மட்டுமல்ல; நாலைந்து பேராகக் கூடி நிற்கவும் கூடாது. போதிய இடைவெளி விட்டு, தள்ளி நிற்பதும் அவசியம்.

இரும்பை ஈர்க்கும் தன்மை கொண்ட காந்தம், சூடாக்கினால் அந்த ஈர்ப்புத் திறனை இழந்து விடுவது எதனால்?

இரும்பிலுள்ள மூலக்கூறுகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட திசையை

நோக்கியதாக அமைந்திருக்கும். அதனால்தான், அவை ஈர்ப்புத் திறனைப் பெற்றுள்ளன.


ஆனால், சூடாக்கப் படும்போது, அந்த மூலக் கூறுகளின் அணிவகுப்பு கலைந்து போகிறது. அதனால், காந்தம் தன்னுடைய ஆற்றலை இழந்து விடுகிறது.

- எஸ். வினித் மாதவன்,
உ.எண். 1196, மதுரை




ஓடும் பேருந்தில் இருந்து இறங்குவது தவறுதான். என்றாலும், அப்படி இறங்கியவுடன் நிற்க முடியாமல், வாகனம் செல்லும் திசையிலேயே சிறிது தூரம் ஓடி நிற்பது ஏன்?

பேருந்து ஓடும்போது, நம்முடைய உடலும் பேருந்தின் வேகத்துக்கு ஆட்படுகிறது. அதனால்தான், பேருந்து திடீரென்று நிறுத்தப்படும்போது, நாம் முன்னால் வேகமாக நகர்கிறோம். அதைப் போன்றே, பேருந்தில் இருந்து இறங்கும்போதும், நம் கால்கள் மட்டுமே நிறுத்தம் பெறுகின்றன. மாறாக, உடல் தன்னுடைய வேகத்தை இழப்பதில்லை. அதனால்தான், ஓடும் பேருந்திலிருந்து இறங்குவோர் அதன் போக்கிலேயே சற்று தூரம் ஓடி நிற்கிறார்கள். இல்லாவிட்டால், கீழே விழுந்து விடுவார்கள்.




- எம். மிருணாளினி,
உ.எண். 1567,
திருமோகூர்.



புள்ளிகளை இணையுங்கள்


கொடுக்கப்பட்டுள்ள எண்களை இணைத்து ஒளிந்திருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள்



பென்சில் பாப்பா!

கதை: சு.அபிருஷக். உ.எண்: 518.சென்னை. படம்: பிள்ளை





மணக்கும்

I 1. கொம்புண்டு; மாடு இல்லை; ஓடு இருக்கும்; ஆமை இல்லை - அது என்ன?

2. வாயில்லை பேச; ஆனால் வந்தவருக்கு நீதியுண்டு - அது என்ன?

- அ-அருண்பாலாஜி,
உ. எண் 1651, கும்பகோணம்

II 1. தண்ணீரில் ஓடும் தத்துவப்பசு; தரையில் ஓடாத வித்துவப்பசு - அது என்ன?

2. ஒத்தைக் கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை - அது என்ன?

- எஸ்.வினித் மாதவன்,
உ. எண் 1196, மதுரை

III 1. அடிபட்டவன் அழுகிறான்; ஆனந்த ராகமாம் - அவன் யார்?

2. பூப்போல மகராசி, காயத்துக்கும் துணையானாள் - அது என்ன?

- எம். மிருணாளினி,
உ. எண் 1567,
மதுரை

IV 1. நடக்க வழியில்லை; நாலு பேருக்கு வழிகாட்டி - அது என்ன?

2. வானத்தில் பறக்கும் வால் நீண்ட பறவைக்கு தரையில் இருக்கும் தம்பி கையிலே இருக்கு



எழுத்து!

கடிவாளம் - அது என்ன?

- ஆர்.பிருந்தா, மதுரை

V 1. வெள்ளி, உடம்புக்காரி பிடித்தால் வழுக்கி விடுவாள் - அவள் யார்?

2. முத்துக்கோட்டையில் சிறைப் பட்ட மகாராணி - அவள் யார்?

- அ.அனுசுயா, உ. எண் 110, உத்திரமேரூர்

VI 1. பறக்கும் எழுத்து எது?



2. சுமக்கும் எழுத்து எது?

3. மணக்கும் எழுத்து எது?

4. குடிக்கும் எழுத்து எது?

5. சுடும் எழுத்து எது?

6. அழைக்கும் எழுத்து எது?

7. போகச் சொல்லும் எழுத்து எது?

8. தமிழ் மாத எழுத்து எது?

- ஜே.மார்டினா இன்பெண்ட், தஞ்சாவூர்

VII 1. கையைக் காலை வெட்டுவான் இவன்; போலீஸ் ஒன்றும் சொல்லாது இவன் யார்?

2. காது இருக்கும்; கேட்காது. இணைக்க உதவும்; பிரிக்காது! - இது என்ன?

3. உடலெல்லாம் உப்பு, ஆனால் டாக்டர் தேவையில்லை. ஏகப்பட்ட சொத்து; என்றாலும் காவல் இல்லை - அவன் யார்?

- ம.அக்ஷயா, உ. எண் 1346, அரூர்



கோகுலம்

செப்டம்பர் 2010




சகாப்தம்!
முத்தையா
முரளிதரன்



✱ அடாக்ஸ்



*Laticanda Colubrina



✱ துருவக் கரடிகள்

இலைக்

எஸ்கிமோக்கள் (Eskimos) என்றவுடன், வடதுருவப் பகுதிகளில் வாழ்பவர்கள் என்று நமக்குத் தெரியும். ஆனால், 'எஸ்கிமோ' என்பது பொதுச் சொல். அதற்குள் பல பிரிவுகள் உண்டு. இவர்கள் சோவியத் யூனியன், அலாஸ்கா, கனடா மற்றும் கிரீன்லாந்து ஆகிய பகுதிகளில் இருந்து குடியேறியவர்கள் என்கிறார்கள் ஆய்வாளர்கள். கனடாவில் 'Inuit' என்றும், அலாஸ்காவில் 'Inupait', 'Yupik' என்றும், சைபீரியாவில் 'Yuit' என்றும் இவர்கள் குறிப்பிடப்படுகிறார்கள். 'எஸ்கிமோ' என்ற சொல்லுக்கு 'பச்சை மாமிசத்தை உண்பவர்கள்' என்று பொருள்!

ஆங்கில எழுத்தான S வடிவில், உடலை வளைத்து வெகுவேகமாக நீந்தும் தன்மை கொண்டவை கடற் பாம்புகள். மற்ற பாம்புகளைவிட, இவற்றுக்கு விஷத்தன்மை அதிகம். Laticanda Colubrina என்ற வகைப் பாம்பு, கடும் விஷம் கொண்டது என்கிறார்கள். கடித்த வேகத்தில், மனிதர்களின் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கக் கூடியது இதன் விஷம். நீருக்குள் மூன்று மணி நேரம் வரை மூழ்கியிருக்கக் கூடிய ஆற்றல் இதற்கு உண்டு.

மூர்க்கமாகப் போராடும் குணமுடையவை துருவக் கரடிகள். மிகவும் வலிமையான இவற்றை,

குடுவை!





வேறெந்த விலங்கும் எளிதில் தாக்க முடியாது. பனி படர்ந்த குகைகளில் வசிக்கும் இவை, நீச்சலிலும் கில்லாடிகள்! உணவுக்காக அனாயாசமாக முன்னூறு கி.மீ. தூரம் பயணிக்கும். நிலப்பகுதியில் சிலவகைப் புல் மற்றும் செடிகள், நீரில் சீல்கள் என்று இதன் உணவுப் பட்டியல் நீளமானது. இதற்கு மோப்ப சக்தியும் அதிகம்.

- எஸ்.சுப்ரியா, உ. எண் 79, சென்னை

பாலைவனப் பகுதியில் காணப்படும் ஒரு வகை மான் அடாக்ஸ் (Addax). குறிப்பாக, சகாரா பாலைவனத்தில், இவை காணப்படுகின்றன. இவை. ஆப்பிரிக்காவை தாயகமாகக் கொண்ட Oryx வகை மான்களின் தோற்றத்தை ஒத்திருக்கின்றன. புல், இலை, தழைகள் இவற்றை உணவாகக் கொள்ளும் இந்த மானினம், மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. கொம்புக்காகவும், தோலுக்காகவும் இவை வேட்டையாடப்படுவதால் அருகி வருகின்றன. இவை கூட்டமாக வாழும் இயல்புடையவை. Addax Nasomaculatus என்பது இதன் அறிவியல் பெயர்.



இலைகளின் முனைகளைச் சுருட்டி, சுரைக் குடுக்கைபோல உருமாற்றிக் கொள்ளும் தன்மை உடைய தாவரம் பிட்சர் (Pitcher). இதன் தாவரவியல் பெயர் நெபந்திஸ் (Nepenthes). சிவப்பு, ஆரஞ்சு என்று வண்ணக் கலவையாகத் தென்படும் இந்த இலைக் குடுவையால் பூச்சிகள் ஈர்க்கப்படும். குடுவையின் விளிம்பில் அமர்ந்து உள்ளே விழும்பூச்சிகளை, இந்தச் செடி உணவாக்கிக் கொள்ளும். இலங்கையில், யாழ்ப்பாணம் பகுதியில் இவ்வகைத் தாவரங்கள் காணப்படுகின்றன.

- ஜி.எஸ்.சபரி,
உ. எண் 1475, கோபி


டாக்டருக்கு வைத்தியம்!

அதிர்ந்து போனார் பெரியசாமி. அவருடைய மனைவிக்கு மருத்துவம் பார்த்ததற்காக, ஐம்பதாயிரம் ரூபாய் தரவேண்டும் என்று சொன்னார் மருத்துவரான மனோகர். ''இதென்ன அநியாயம்? நீங்கள் ஒரே ஒருமுறை வந்து போனீர்கள். அப்போதும் உங்களுக்கான கட்டணத்தைத் தர முற்பட்டேன். நீங்கள் வாங்கிக் கொள்ளவில்லை. இப்போது, இப்படிக்கேட்டால் எப்படி?''

அதைக் கேட்டும் அசரவில்லை அந்தப் போலி மருத்துவர். 'என் பெண்டாட்டியைக்கொன்னாலும் சரி; காப்பாத்தினாலும் சரி. நீங்க கேட்ட பணத்தைத் தருவேன்னு சொன்னியா இல்லியா? சொன்னபடி செய்!'

பெரியசாமி, அந்த ஊரின் தலைவரிடம் போனார். நடந்த விஷயத்தைச் சொன்னார். அதைக் கேட்டதும் அவருக்கு, டாக்டர் மீது சந்தேகம் வந்தது. எனவே, அவரை அழைத்து வரச் சொன்னார். வந்த டாக்டரிடம் கேட்டார்:

'ஐயா, பெரியசாமி சொன்னதைக் கேட்டோம். நியாயம் உங்க பக்கம்தான் இருக்குன்னு புரிஞ்சுது. அதனாலே, எங்க முன்னால் பணத்தைக் கொடுக்கச் சொல்லலாம்னுதான் உங்களை வரச் சொன்னேன். தப்பா எடுத்துக்கிடாதீங்க' என்றார் ஊர்த் தலைவர்.



மனோகர் உற்சாகமானார். ஐம்பதாயிரம் ரூபாய் கிடைக்கப் போகிற சந்தோஷம் அவர் முகத்தில் பளபளத்தது. அதனால், மிகவும் பணிவாகவே சொன்னார்: ''நீங்க என்ன செல்றீங்களோ, அப்படியே ஆகட்டும்''. கையில் பணத்தோடு நின்றிருந்த பெரியசாமியை கேலியாகப் பார்த்தார். ஊர்த்தலைவர் பேச்சைத் தொடர்ந்தார்: ''ஐயா, ஒரே ஒரு கேள்வி.




அதுக்கு மட்டும் பதில் சொல்லிட்டு, பொய் சொன்ன இவன்கிட்டேயிருந்து நீங்க பணத்தை வாங்கிக்கிடுங்க. அவன் கேட்டபடி, அவன் மனைவியை நீங்க காப்பாத்தினீங்களா?''

''இல்லை; அவர்கள் இறந்து விட்டார்கள்,'' மெல்லிய குரலில் சொன்னார் மருத்துவர். அடுத்துக் கேட்டார் ஊர்த்தலைவர்: ''அப்படின்னா, அவன் மனைவியை நீங்கள்தான் கொன்றீர்களா?'' அரண்டு போனார் மருத்துவர். ''ஐயையோ, நான் கொல்லவில்லை. இயற்கையாகத்தான் அவர் இறந்தார்'' பதறிப்போய்ச் சொன்னார் மருத்துவர். அதைக் கேட்ட ஊர்த்தலைவர் சொன்னார்: ''ஐயா, காப்பாத்தவும் இல்லை; கொல்லவும் இல்லை. பிறகு எதுக்கு அவர்கிட்டே கட்டணம் கேட்டீங்க?''

பதில் சொல்ல முடியாமல் திணறிய மருத்துவரிடம் முடிவாகச் சொன்னார் ஊர்த்தலைவர்: ''நீங்க போலியானவர்னு எங்களுக்குத் தெரிஞ்சுடுச்சு. அதனாலே...'' அவர் பேசப் பேச அவமானத்தால் தலைகுனிந்தார் மருத்துவர். அப்போது, அவர் தோளில் படிந்தது ஒரு கரம்; திரும்பிப் பார்த்தார். அங்கே போலீஸ் இன்ஸ்பெக்டர் நின்று கொண்டிருந்தார்.

– ஃபாத்திமா,
மக்தூமியா
உயர்நிலைப்
பள்ளி,
கீழக்கரை



வண்ணம் தீட்டுங்கள்!

ஜாலி டைம்

இங்குள்ள
படத்துக்கு
வண்ணம் தீட்டி
மகிழுங்கள்





வழி காட்டுங்கள்!

ரோஜாச் செடிக்கு தண்ணீர் ஊற்ற
இந்தச் சிறுமிக்கு உதவுங்கள்

'தெர்மோகோல்...'



உடற்பயிற்சி வகுப்பு. ஆசிரியர், பயிற்சி கொடுப்பதோடு விளையாட்டு தொடர்பான செய்திகளையும் சொல்வார். கிரிக்கெட், கால்பந்து, ஹாக்கி, கபடி, செஸ்... அத்தனை விளை யாட்டுகளையும் பற்றிச் சொல்வார். அன்றும் அப்படித்தான்.

''கோல் என்று சொன்னால், பொதுவாக எல்லோரும் கால்பந்து என்றுதான் நினைக்கிறோம். ஆனால், ஹாக்கி, கூடைப்பந்து போன்ற விளை யாட்டுகளிலும் கோல் என்றுதான் சொல்வார்கள். தவிர, மனிதனின் லட்சியம் என்று சொல்லும் போதும் இந்தச் சொல்லைப் பயன்படுத்துவர்.''


அவர் சொல்வதை கவனிக்காமல், பக்கத்தில் பேசிக் கொண்டிருந்தான் ஒரு மாணவன். அவனை எழுப்பிய ஆசிரியர் கேட்டார்: ''கோல், எந்த விளையாட்டுகளில் பயன் படுதப் படுகிறது?''

வேகமாய் பதில் சொன்னான் அந்த மாணவன்: ''தெர்மாகோல். வைக்கோல்...'' என்று அடுக்க, குபீரென்று பெருகியது சிரிப்பு.

- மு. அருண்குமார்,
உ.எண்.670, ஓசூர்.

''பூ கொடுத்து விடுங்க!''

உறவினர் இல்லத்தில் நடைபெற்ற விழாவுக்கான பணிகள் அடுத்தடுத்து வந்தன. அதனால், வீட்டுப்பாடத்தைச் செய்யத் தவறிவிட்டேன். வகுப்பா



வைக்கோல்..!



சிரியை கேட்டபோது, 'ஏதேனும் திட்டு வார்களோ என்ற பயத்தில்,'அம்மாவுக்கு முடியவில்லை.அதனால் வீட்டு வேலைகளில் இதைச் செய்யத் தவறிவிட்டேன்' என்றேன். அன்று மாலை, என்னை அழைத்துச் செல்ல, அப்பா வந்திருந்தார். அவரைப் பார்த்துவிட்ட ஆசிரியை, ''உங்க மனைவி இப்ப எப்படி இருக்காங்க?'' என்று விசாரித்துவிட்டார். முதலில் குழம்பிய அப்பா சட்டென்று சமாளித்து, 'இப்போது பரவாயில்லை' என்றார். அதைப் புரிந்துகொண்ட எங்கள் ஆசிரியை சொன்னார்: ''நாளைக்கு வரும்போது உங்க தோட்டத்திலே இருந்து பூ கொடுத்து விடுங்க'' என்றார். திடீரென்று அவர் இப்படிக் கேட்டதும் நாங்கள் விழித்தோம். குறும்புச் சிரிப்புடன் சொன்னார் ஆசிரியை:''அப்பாவும் பொண்ணும் சேர்ந்து சொன்ன பொய்யை கேட்டேன்ல. அதனால, காதுல வைக்கக் கலாமேன்னு கேட்டேன்''. அதைக் கேட்ட எங்கள் இருவர் முகத்திலும்...டன் டன்னாய் வழிந்தது- அசடு!

- ஜி.எஸ். ஸ்ரீமதி, உ.எண்.1382, கோபி


''ரெஸ்ட் எடுத்துக்கோ!''

நண்பன் வீட்டில் புதுமனை புகுவிழா! என்ன சொல்லி லீவு எடுப்பது என்று தெரியாமல், எல்லாரும் சொல்வது போல ஜுரம் என்று லீவு எடுத்தேன். ஆனால், விழாவுக்கு வந்திருந்தார் என் வகுப்பாசிரியர். அவர் என்னைப் பார்த்துவிடக் கூடாது என்பதற்காக ஒளிந்து திரிந்தேன். சற்று நேரத்தில் யாரோ என்னைப் பின்னாலிருந்து தொட்டார்கள். பார்த்தேன். எங்கள் ஆசிரியர்தான். எனக்கு நிஜமாகவே ஜுரம் வந்த மாதிரி ஆயிற்று. அவர் சிரித்தபடியே சொன்னார்:

''என்னப்பா, ஜுரம் தேவலாமா? ஒண்ணும் அவசரமில்லை. இன்னொரு நாள் வேணாலும் ரெஸ்ட் எடுத்துகிட்டு வா''. அதைக் கேட்டதும், பொய் சொன்ன எனக்கும், ஐடியா கொடுத்த நண்பனுக்கும் அசடு வழிவதைத் தவிர வேறு வழியில்லை.

- ஜி. எஸ். சபரி, உ.எண்.1475, கோபி







✱ புனித சேவியர் தேவாலயம்

அழகின்

பச்சைப் பசேலென்ற வயல்வெளிகள், வானை வருடுவது போல எழுந்து நிற்கும் மலைத்தொடர், சலசலத்து ஓடும் நீர்க்கால்கள், அலைவாயால் கடல் பாடும் கடற்கரை... என்று அழகின் அடையாளங்கள் அனைத்தையும் கொண்டு விளங்குவது, எங்கள் ஊரான நாகர்கோவில்.

எங்கள் ஊரின் பெயருக்குக் காரணமான நாகராஜா கோவில், ஊரின் மையத்தில் அமைந்துள்ளது. அருமையான இயற்கைச் சூழலில் அமைந்துள்ளது இந்தத் திருக்கோவில். எங்கள் பகுதியின் மிகச் சிறப்பான வழிபாட்டுத் தலம் இது.

இதைப்போன்றே, இங்குள்ள புனித பிரான்ஸிஸ் சேவியர் தேவாலயம் உலகப் புகழ் பெற்றது. அரசு ரப்பர் கார்ப்பரேஷன், காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி, கூடங்குளத்தில் அணுமின் நிலையம் போன்றவை எங்கள் ஊருக்கு அருகே அமைந்துள்ளன. மீன்பிடி வலை தயாரிப்பு இங்கு நடைபெறும் முக்கியத் தொழில். உள்நாட்டுத் தேவைக்கு மட்டுமல்ல; வெளிநாடுகளுக்கும் இது ஏற்றுமதி செய்யப்படுகிறது.

'நாஞ்சில் நாடு' என்றழைக்கப்பட்ட இந்தப் பகுதி, இந்தியா விடுதலை பெற்ற சமயத்தில், திருவாங்கூர் சமஸ்தானத்துடன் இணைந்திருந்தது. பிறகு, 1956-ல், நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, தமிழகத்துடன் இணைக்கப்பட்டது.



சிரிப்பு!



வட்டக்கோட்டை, உதயகிரிக் கோட்டை ஆகிய கோட்டைகள், சங்குத் துறை, தேங்காய்ப் பட்டணம், முட்டம் ஆகிய கடற்கரைகள், திற்பரப்பு :பான்ற அருவி கள், பத்மனாபபுரம் அரண்மனை, மூலி கைகள் நிறைந்த மருத்துவாழ் மலை.. என்று எங்கள் ஊரைச் சுற்றி, பார்க்கத் தகுந்த இடங்கள் பல.

சிவன், பிரம்மா, விஷ்ணு எனப்படும் மும்மூர்த்திகளும் ஒருருவில் இணைந்த தாணுமாலயன் திருக்கோவில், சுசீந்தி ரத்தில் அமைந்துள்ளது. இங்கே, மிகப்பெரிய உருவில் காட்சி தரும் அனுமாரைத் தரிசிக்கலாம்.

இங்கிருந்து சுமார் இருபது கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது, முக் கடல்களும் சங்கமிக்கும் கன்யாகுமரி. அங்குள்ள குமரியன்னையின் ஆலயம், விவேகானந்தர் பாறை, காந்தி மண்டபம், 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலை... என்று சுற்று லாப் பயணிகளை ஈர்க்கும் அம்சங்கள் அதிகம்.

'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு- அங்கே துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி.
'அம்மா' என்குது வெள்ளைப்பசு - உடன் அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி'

பலரும் அறிந்த இந்த பாப்பாப் பாடலை எழுதியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. அவர் பிறந்ததும், எங்கள் ஊரான நாகர்கோவில்தான். புகழ்பெற்ற திரைக் கலைஞரான கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், பொதுவுடமைத் தலைவர் ப. ஜீவானந்தம் ஆகியோர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். சுற்றுலா செல்வதாக இருந்தாலும் சரி; பக்திப் பயணம் செல்வதாக இருந்தாலும் சரி; எங்கள் ஊருக்கு ஒருமுறை வாருங்கள். புதிய அனுபவங்கள், புதிய தகவல்கள் உங்களுக்குக் கட்டாயம் கிடைக்கும். ●

✦நாகராஜா கோவில்



– எஸ். தாணு, உ.எண். 286, சாகுபுரம்.

உங்கள்



பிரியதர்ஷினி.
சிந்தி வித்யாலயா.
கோவை


கே.எஸ்.யோகேஷ்வரன்.
உ.எண் 146.
திருச்சி.






ரிஷி.
தி. வி. பி.
மெட்ரிகுலேஷன் பள்ளி.
கோவை.

கமலா தேவி.
மவுண்ட் மெட்ரிக் பள்ளி.
திருவண்ணாமலை.



கை வண்ணம்!






சங்கீதா.
கஸ்தூரிபா காந்தி பாலிகா
வித்யாலயா.
தருமபுரி



மௌரியா.
கீர்த்திமான் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி.
கோவை.



சிந்துமதி.
சாரதா
மெட்ரிகுலேஷன் பள்ளி.
செஞ்சி.



ப்ரீத்தி.
புனித வளனார்
மெட்ரிக் பள்ளி,
மதுரை.



சொல்லாதே



''எனக்கு இரண்டு நாளா கடுமையான இருமல் டாக்டர்.''

''அப்படியா, ரெண்டு நாளா என்ன பண்ணீங்க?''

''இருமிக்கிட்டுதான் இருந்தேன் டாக்டர்.''



''ஜாதகப்படி எனக்கு அறிவு ஜாஸ்தியாம்! ஜோஸியர் சொல்கிறார்.''

''இப்பவாவது புரியுதா, நான் ஏன் ஜாதகத்தை நம்புறது இல்லைன்னு!''



''நீங்க அதிர்ஷ்டசாலி ''

''எப்படிச் சொல்றீங்க டாக்டர்?''

''இன்னிக்கு நான் உங்களுக்கு பண்ண வேண்டிய ஆபரேஷனை ஒத்தி வைச்சுட்டேனே.''



''எல்லா டாக்டரும் கை விட்டுட்டாங்க.''

''பாவம்.... ஏன்...?''

''ம்.. என் பாக்கெட்டுலேந்து ஃபீஸ் பணத்தை எடுக்கவே முடியலையே!''

- பி.பரத், உ. எண் 1257, சிதம்பரம்



ஆசிரியர் : என்னடா இது?

மாணவர் : உன் மண்டையில ஏதாவது இருக்கான்னு கேட்டீங்களே. இந்தாங்க என்னோட சி.டி. ஸ்கேன் ரிப்போர்ட்!




ரவி : என் நாய்க்கும் என்னை மாதிரியே அறிவுடா!

ரகு : வெளியே சொல்லாதே. அப்புறம் நாயை யாரும் விலைக்கு வாங்க மாட்டாங்க.

- எஸ்.மேரி ஜீனா, உ. எண் 1322, பாலக்காடு



யாரும் கேட்டால்!



போலீஸ் : என்னய்யா போலீஸ் ஸ்டேஷனுக்குள்ள மாட்டை ஓட்டிட்டு வந்திருக்க?

மாடு மேய்ப்பவன் : ஐயா! இங்கே நல்லா லாடம் கட்டுவாங்கன்னு கேள்விப்பட்டேன் அதான்.

பையன் : அப்பா! தம்பி என்னை கழுதைன்னு சொல்றாம்ப்பா.


அப்பா : டேய், அண்ணனை பேர் சொல்லிக் கூப்பிடக்கூடாது.


- ஆர்.எஸ். அரவிந்த், மயிலாடுதுறை



மூளைக்கு வேலை

இரண்டு படங்களுக்கும் இடையே
ஐந்து வித்தியாசங்கள் உள்ளன.
அவற்றைக் கண்டுபிடியுங்கள்.





வித்தியாசங்களைக் கண்டுபிடி!

விடைகள்; 1.சுருக்குப் பை 2. காலில் தண்டை 3.சீப்பில் பல் 4. டின்னில் படம் 5. மூக்கில் புல்லாக்கு

கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டையில்!

கோவை, மேட்டுப்பாளையம் அருகே உள்ள சிறுமுகையில் இயங்கி வரும் ஸ்ரீவிஜயலக்ஷ்மி மெட்ரிகுலேஷன் பள்ளியைச் சேர்ந்த மாணவ, மாணவியர் இம்முறை சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியலில் இடம் பெறுகிறார்கள்.

1726. கி.ஜெனிஷா, ஏழாம் வகுப்பு
1727. தி.சரண்யா, எட்டாம் வகுப்பு
1728. கி.மதுநிவேதா, எட்டாம் வகுப்பு
1729. ம.பிரதீப், ஏழாம் வகுப்பு
1730. ப.தினேஷ், ஆறாம் வகுப்பு
1731. இரா.அபினேஷ், எட்டாம் வகுப்பு
1732. ஏ.முகமது ஸஃபான், ஆறாம் வகுப்பு
1733. டி.ஜீவித் குமார், ஆறாம் வகுப்பு
1734. உ. அனுஸ்ரீ, ஆறாம் வகுப்பு
1735. இர.அமுதா, ஆறாம் வகுப்பு
1736. எஸ்.ஜி.ஸ்ரீராம், ஆறாம் வகுப்பு
1737. மா.ஷண்மதி, ஏழாம் வகுப்பு
1738. என்.பவித்ரன், ஆறாம் வகுப்பு
1739. வெ.குமரகுருபரன், பத்தாம் வகுப்பு
1740. க.அஜீத்குமார், ஆறாம் வகுப்பு
1741. எஸ்.புஷ்ரா மரியா, ஆறாம் வகுப்பு
1742. வி.எம்.நளினி சௌந்தர்யா, ஆறாம் வகுப்பு
1743. சு.ஜெயசூர்யா, ஏழாம் வகுப்பு
1744. நா.காருண்யா, ஏழாம் வகுப்பு
1745. பி.ஓ.தீப்தி, ஆறாம் வகுப்பு
1746. மு.மோகன் பிரசாந்த், ஏழாம் வகுப்பு
1747. கு.கௌசிக் ராஜா, ஏழாம் வகுப்பு
1748. கே.ராகவி, ஆறாம் வகுப்பு
1749. ச.சங்கவி, பதினொராம் வகுப்பு
1750. சி.த. மனிஷ்ஷா, எட்டாம் வகுப்பு
1751. ஆர்.அஸ்வின், ஏழாம் வகுப்பு
1752. சு.ஸ்ரீஹரி, ஏழாம் வகுப்பு
1753. ஆர்.ராம்பிரபு, ஏழாம் வகுப்பு
1754. ரா.சினேகா, ஏழாம் வகுப்பு
1755. என்.மோகனபிரியா, ஏழாம் வகுப்பு



கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் :..

வயது :..

பெற்றோர் பெயர் :..

வகுப்பு, பள்ளி :..

....

வீட்டு முகவரி :..

....

....


நான் கோகுலம் சிறுவர் சங்கத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1756. மு.ர.நவீன், ஏழாம் வகுப்பு
1757. நா.திவின்குமார், ஆறாம் வகுப்பு
1758. பி.அரவிந்தக் கண்ணன், ஆறாம் வகுப்பு
1759. ஏ.முகமது ரஃபி, ஏழாம் வகுப்பு
1760. ஆர்.சக்தி ஞானவேல், பன்னிரண்டாம் வகுப்பு
1761. சி.மஞ்சுளா, ஆறாம் வகுப்பு
1762. டி.புவனேஸ்வரி, ஆறாம் வகுப்பு
1763. செ.ஜானகிராமன், ஏழாம் வகுப்பு
1764. த.ஹரிஹரகுமரன், ஏழாம் வகுப்பு
1765. ஆர்.எம்.திவ்யா, ஏழாம் வகுப்பு
1766. அ.மைக்கில் அபிஷேக், ஏழாம் வகுப்பு
1767. ஆர்.ஷீலா, ஏழாம் வகுப்பு
1768. எம்.சதீஷ், ஆறாம் வகுப்பு
1769. எஸ்.கோவிந்தராஜுலு, எட்டாம் வகுப்பு
1770. பி.பவன் கிருஷ்ணன், ஏழாம் வகுப்பு
1771. டி.நவஸ்வேதா, ஏழாம் வகுப்பு
1772. ம.ஸ்ருதி, ஏழாம் வகுப்பு
1773. ஆர்.ஜனனி, ஏழாம் வகுப்பு
1774. ஆர்.லக்ஷ்மிபிரியா, ஆறாம் வகுப்பு
1775. டி.பவதாரிணி, ஆறாம் வகுப்பு






கோபி : ரவி,'ஐ டோன்ட் நோ'ன்னா என்னடா அர்த்தம்?

ரவி : எனக்குத் தெரியாது.

கோபி : உனக்கும் தெரியாதா?



வேலு : நான் ஆரம்பித்த வியாபாரத்தில் ஏகப்பட்ட பணம் தண்ணியா கரைஞ்சுக்கிட்டே இருக்கு.

பாலு : அப்படி என்ன வியாபாரம் ஆரம்பிச்சே?

வேலு : ஐஸ் வியாபாரம்!


- ஜூ.வி.சுபாஷ், சேலம்

கரையும் பணம்!

''உங்கப்பா புதுசா பைக் வாங்கியிருக்காரே, பெட்ரோல் என்ன கொடுக்குது?''

''அது எங்க கொடுக்குது, நாங்கதான் லிட்டர் லிட்டரா போடுறோம்.''





''டாக்டர், எனக்கு வயிற்றில் 'கடபுடா'ன்னு சத்தம் வருது.''

''இந்தாங்க, இந்தப் பஞ்சைக் காதுல வைச்சுக்கங்க. சத்தம் கேட்காது.''

- பி.பரத், உ.எண் 1257, சிதம்பரம்



''மான் என்ன, யாராலும் என்னை ஓட்டத்தில் ஜெயிக்க முடியாது'' அலட்டலாகச் சொன்னது முயல். இதைக் கேட்ட விலங்குகள் மிகவும் கோபப்பட்டன. இவன் கர்வம் அடங்க வேண்டும். அதற்கு மான் ஜெயிக்க வேண்டும்' என்று விரும்பின. 'பலே, நாம் ஒரு போட்டி நடத்துவோம். அதில் வெற்றி பெறுபவருக்கு நான் அழகான கொம்புகளைப் பரிசாகத் தருவேன்' என்றது மரங்கொத்தி.

போட்டிக்குரிய இடமாக, ஆந்தை வசித்த அடர்ந்த காட்டுப்பகுதியை அறிவித்தன. 'அங்கிருந்து ஓடி ஆற்றில் நீர் முகந்து, மீண்டும் அதே இடத்துக்கு வரவேண்டும். யார் முதலில் வருகிறார்களோ அவர்களே போட்டியில் வென்றவர்கள்' என்பது நிபந்தனை.

இந்த நிபந்தனையை மானும் முயலும் ஏற்றன. போட்டியின் நடுவராக ஆந்தை. தவறு நடக்காமல் மேற்பார்வை செய்பவராக காகத்தை நியமித்தனர். போட்டிக்கான நாளும் வந்தது.

விலங்குகளும் பறவைகளும் கூடிவிட்டன. சிங்கம், யானை, ஒட்டகம்

மான் கொம்பு



சிவிங்கி வரிக்குதிரை... என்று பலவும் காத்திருந்தன. போட்டி துவங்கும் இடத்தில் மான் மட்டுமே இருந்தது. முயலைக் காணவில்லை. 'என்னாயிற்று முயலுக்கு?' என்ற கேள்வி அனைவரையும் குழப்பியது. நடுவரான ஆந்தை சிறிது யோசனைக்குப் பின், அணிலை அழைத்தது.

''நீ போய் முயல் எங்கே இருக்கிறது என்று பார்த்து அழைத்து வா'' என்றது. செடிகளிலும் புதர்களிலும் புகுந்து புகுந்து தேடிச் சென்றது அணில். சற்றுத் தொலைவில், புதர்களின் கீழே ஓடுவதற்கு ஏற்ப முயல் பாதை ஏற்படுத்திக் கொண்டிருந்ததைப் பார்த்தது. அதை முயலும் கவனித்துவிட்டது.

இரண்டும் போட்டி துவங்கும் இடத்துக்கு வந்தன. முயல் செய்த கள்ளத்தனத்தை அனைவர் முன்பும் சொன்னது அணில். முயலோ 'இல்லவே இல்லை; அந்தப் பாதை அங்கு ஏற்கெனவே இருந்ததுதான்' என்று பிடிவாதமாய்ச் சொன்னது. தவிர, போட்டி நடக்காமல் 'மான் ஜெயித்தது' என்று தீர்ப்பு சொன்னாலும், அதை ஏற்கமாட்டேன் என்றது. நடுவர் ஆந்தையும் குழப்பமடைந்தது.

''ஓடித் தோற்றாலும் பெருமை என்பதை மறந்து, ஏமாற்றி ஜெயிக்க முற்பட்டாய். அது தவறு. அதை ஒப்புக்கொள் முதலில்' என்று கோபமாய்ச் சொன்னது காட்டு ராஜாவான சிங்கம். ஆனாலும், முயல் ஏற்கவில்லை. 'அப்படியானால், நாம் நட்சத்திர தேவனை வேண்டுவோம். அவன் தீர்ப்பே இறுதியானது'' என்று ஒரு குரலாய்ப் பேசின மிருகங்கள்.

அவற்றின் அழைப்பை ஏற்றுத் தோன்றிய நட்சத்திர தேவன், முயலின் காதுகளைப் பற்றித் தூக்கினான். அப்போது உடலின் கனம் தாங்காமல், முயலின் காதுகள் நீண்டன. 'ஆ' என அலறியது முயல். அதைக் கீழே விட்ட தேவன், முயலிடம் சொன்னான்: ''நீ பொய் சொன்னதால், இனி உன் காதுகள் நீண்டே இருக்கும். போட்டி நடக்காவிட்டாலும் பொய்க்குத் துணியாத மானுக்கு மரங்கொத்தி செய்த கொம்புகளே பரிசு'' என்று அந்தக் கொம்பை தலையில் பொருத்தினான். அதன் பிறகுதான், மான்களுக்குக் கொம்பு வந்தது; முயல்களுக்குக் காதுகள் நீண்டன.

- மெ.அ.கா. ஹாஜா தவ்பீக்,
காயல்பட்டினம்



பொதுவாக மான்களுக்கு இரண்டு கொம்புகள்தான் இருக்கும். ஆனால், நான்குகொம்புள்ள மான்களுமுண்டு. tetracerus quadricornis என்பது இதன் அறிவியல் பெயர். இந்தியில் 'சௌசிங்கோ' என்று சொல்வர். சித்த மருத்துவத்தில், மார்வலி போன்ற நோய்க்கான சிகிச்சையில் மான் கொம்பு பயன்படுத்தப்படுகிறது.

✱ 'மே' என்றால் மாதம் மட்டுமல்ல; அதே பெயரில் ஒரு பூச்சியும் இருக்கிறது. வழக்கு மொழியில் may bug என்று சொல்லப்படும் இதன் இன்னொரு பெயர் cockchafer.

✱ 'ஓக்' (Oak) மரங்கள் மிக உயரமாக வளரக்கூடியவை. இவற்றை இடிக்கடவுளாக வழிபடும் வழக்கம் நிலவுகிறது. காரணம், உயரமான இந்த மரங்களை அடிக்கடி இடி தாக்குவதுதான் என்கிறார்கள் ஆய்வார்கள்.

✱ எட்டுக்கால் பூச்சி என்றவுடன் நாம் சிலந்தியை மட்டும்தான் நினைக்கிறோம். ஆனால், தேள், மைட்ஸ் (mites), டிக்ஸ் (ticks) போன்றவற்றுக்கும் எட்டுக் கால்கள்தான். இன்னொன்று, இவை பூச்சி (insect) இனம் இல்லை. இவற்றை arachnid என்பார்கள்.

- ஆர்.ஆசிக் அகமது,
உ. எண் 1157, கம்பம்

✱ உலகின் மிகப் பெரிய எறும்பு, ஆப்பிரிக்காவில் காணப்படும் டிரைவர் (driver) எறும்புகள்தான். சுமார் மூன்று செ.மீ. நீளம் கொண்ட இதனை சஃபாரி எறும்புகள் (safari ants) என்றும் குறிப்பிடுவர்.

✱ தட்டு போலவே காணப்படும் மிகப் பெரிய இலையைக் கொண்ட நீர்த்தாவரம் விக்டோரியா ரெஜியா (Victoria Regia) என்னும் அல்லியின் இலை. ஆங்கிலத்தில் இதன் பெயர் water lily.

✱ அணில் என்றதும், உணவைக் கொறிக்கும் அதன் தோற்றமும், முதுகில் உள்ள கோடுகளும் நினைவுக்கு வரும். ஆனால், அமெரிக்காவில் காணப்படும் சிவப்பு அணில் உள்ளிட்ட சில அணில் இனங்களுக்கு முதுகில் கோடு இருக்காது.

- பி.பரத், உ. எண் 1257
சிதம்பரம்

✱ குரங்குகளைப் போலவே, தன் குட்டிகளையும் இரை தேடச் செல்லும்போது, சுமந்து செல்லும் பழக்கம் கொண்டது எலிக்காது வெளவால் (mouse ear bat). Myotis mystacinus என்பது இதன் அறிவியல் பெயர்.

✱ கடுமையான விஷத் தன்மை கொண்ட தாவரங்கள் ஆப்பிரிக்காவில் மட்டுமின்றி, இந்தோனேஷியாவிலும் இருக்கின்றன. இங்குள்ள 'உபாஸ்' என்ற மரவகை, மிகக் கடுமையான விஷம் கொண்டவை என்கிறார்கள்.

- ம.விவேக், குட்ட...

✱ உலகத்து நகரங்களில் மக்கள் தொகை பத்து இலட்சத்தை முதலில் எட்டியது இலண்டன் நகரில்தான். அதுவும் பத்தொன்பதாம் நூற்றாண்டின்போதே, இத்தனை பேர் இலண்டனில் வசித்தார்களாம்.

✱ 'கோகினூர் வைரம்' என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இதில் 'கோகினூர்' என்றால் என்ன என்று தெரியுமா? இது பாரசீக மொழிச்சொல் (கோஹ்-இ-நூர்) 'ஒளி மலை' என்று அர்த்தம். இதன் எடை 105.6 காரட்.

- ஏ.கே.நாசர், டி.ஆர்.பட்டினம்



ஒளி மலை!



ஜில் வரலாறு!

பாரசீகப் பரிசு!



வெனிலா, ஸ்டிரா பெர்ரி என்று விதவிதமாக நாம் ஐஸ்கிரீம் சாப்பிடுகிறோம். இதை முதன் முதலில் தயாரித்துப் பயன்படுத்தியவர்கள் பிரஷ்யர்கள் - பாரசீகர்கள், அதாவது இன்றைய ஈரான் பகுதியைச் சேர்ந்தவர்கள். கி.மு. மூன்றாம் நூற்றாண்டில், சீனர்கள் ஐஸ்கிரீம் தயாரித்தனர்.

ஆரம்ப காலத்தில் இதனை பனிக்கூழ், பழக்கலவையால் உருவாக்கினர்.

அலெக்ஸாண்டர் என்ற ரோமப் பேரரசர் காலத்தில் பால், தேன் மற்றும் பழக்கூழின் கலவையால் ஐஸ்கிரீமை உருவாக்கி உண்டு மகிழ்ந்தனர்.

பதிமூன்றாம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் ஐஸ்கிரீம் சுவையை முதல் முதலில் உணர்ந்து மகிழ்ந்தனர். இத்தாலியைச் சேர்ந்த மார்க் கோபோலோ ஐஸ்கிரீம் தயாரிக்கும் முறையை சீனாவிலிருந்து பெற்றார். ஆரம்ப காலகட்டத்தில் 'பட்டர்-ஐஸ்', 'கிரீம்-ஐகா', 'மில்க்-ஐகா' என்று இதற்குப் பெயரிட்டு அழைத்தனர். ஆனால் முதன் முதலில் அமெரிக்கர்கள்தான் 'ஐஸ்-கிரீம்' என்று பெயரிட்டனர். Iced Cream-என்ற சொல்லில் இருந்து பெறப்பட்டது இந்த வார்த்தை.



பல்வேறு சுவைகளில் நாளடைவில் ஐஸ்கிரீம் தயாரிக்கப்பட்டபோதும், ஒரு அமெரிக்க பேக்கரி உரிமை யாளரின் மகள் தற்செயலாக குச்சி ஐஸ் தயாரித்தார். அதுவே stick-ice என்று புகழ்பெற்றுவிட்டது.

இன்று உண்டு மகிழும் ஐஸ்கிரீம் வகைகளில் (vanilla) வெனிலா சுவை கொண்டதே உலகெங்கிலும் பரவலாக விரும்பப்படுகிறது.

- சங்கீதா சுந்தர், பெரியகுளம்.

பழமொழிகள் பலவற்றை நாம் பயன்படுத்துகிறோம். ஆனால், அவற்றின் உண்மையான பொருளை அறிந்து கொள்ளவில்லை. அப்படிச் சிலவற்றை இங்கே காண்போம்!

* 'ஆவதும் பெண்ணாலே; அழிவதும் பெண்ணாலே'.

'பெண்கள் குடும்பத்தை அழித்து விடுகின்றனர்' என்று இதற்குப் பொருளல்ல. சத்தியவான், அரிச்சந்திரன் போன்றவர்கள் புகழ்மிக்கவர்களாக ஆனது பெண்களாலேயே. (சாவித்திரி, சந்திரமதி). தவத்தாலும், வரத்தாலும், ஆற்றலாலும் இணையற்ற ராவணன் அழிவு பெற்றதும், ஆட்சியும் அதிகாரமும் கொண்ட துரியோதனன் அழிந்ததும் பெண்களாலேயே (சீதை, திரௌபதி) நல்லவர்கள் சிறப்படைவதும், தீயவர் அழிவதும் பெண்களால்தான் என்பது உட்பொருள்.

* ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன்

இதற்கான பொருள் வேறு. சித்த வைத்தியத்தில், பல்லாயிரக்கணக்கான மூலிகைகள் உண்டு. அவற்றை இலை, தண்டு, வேர் என்று பிரித்து, மருந்து தயாரிக்க பயன்படுத்துவார்கள். அப்படி, ஆயிரம், வேரைக் கொண்டவன் - அதாவது கண்டறிந்தவன், அரை வைத்தியன் என்பதுதான் பொருள்.

* 'ராமேஸ்வரத்தில் குருவி தங்காது' பழமொழியே வேறு! அது, 'இராம சரம் குறி தப்பாது' என்பதுதான். அதாவது ராமன் எய்யும் அம்பு குறி தவறாமல், இலக்கைத் தாக்கும் என்பது. சொல்வழக்கில் திரிந்து போனதால், பொருளே மாறிவிட்ட பழமொழிகளில் இதுவும் ஒன்று!



- பி.தங்கவேல்,
உ. எண் 812,
தாரமங்கலம்

ராமேஸ்வரக் குருவி!





'ரெட்டைவால்'

1843 பேரைப் படிச்சவுடனேயே ஏதோ ஓர் ஆண்டுன்னு தெரியும். உண்மைதான். 1843ஆம் ஆண்டில் விண்ணில் தோன்றிய மகா வால் நட்சத்திரத்துக்கு 1843 ஐ மற்றும் இ/1843ஐ எனப் பல பெயர்களைக் கொடுத்திருக்காங்க. விண்ணில் வால் முளைத்தது போல நீண்டு நகர்ந்து சென்ற வால் நட்சத்திரம், மார்ச் மாதம் 6ஆம் தேதி 1843ஆண் ஆண்டு பூமியை நெருங்கி வந்தது. சூரியனுக்கே சவால் விட்டு அதன் அருகில் சென்ற இந்த வால் நட்சத்திரம் 19, ஏப்ரல் 1843ஆம் ஆண்டு கடைசியாக விண்ணில் தெரிந்ததாம். சூரியனை இது நெருங்கிய அளவு, வேறு எந்த வால் நட்சத்திரமும் நெருங்கிச் செல்லவில்லை என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

பிப்ரவரி 27, 1843ஆம் ஆண்டில் இதன் நீளம் எவ்வளவு தெரியுமா? 8,30,000 கிலோ மீட்டர்! அப்போ... சதாரண வாலு இல்லை. 'இரட்டை வால்' பையன்!



ராபர்ட் எச். காட்டர்டு

ஒலிம்பஸ்!

விண்வெளியின் மிக மிக உயரமான எரிமலை, செவ்வாய்க் கிரகத்தில் உள்ளது. ஆம்; அதன் பெயர் 'ஒலிம்பஸ்'. எவரெஸ்ட்டைப் போல மூன்று மடங்கு பெரியது. செவ்வாயின் மேற்பரப்பிலிருந்து கணக்கிடும்போது ஒலிம்பஸ் மலையின் உயரம் 27 கிலோ மீட்டர்கள். அதாவது சுமார் 88,583 அடிகள். அகலம் 550 கிலோ மீட்டர். இதன் பரப்பளவைக் கணக்கிட்டால், அமெரிக்காவில் உள்ள 'அரிசோனா' மாகாணத்துக்கு ஒப்பாக உள்ளதாம். ஊர் சைசுக்கு ஓர் எரிமலை!

அசராத மனிதர்!

விண்ணில் பறக்கின்ற ராக்கெட்டுக்குத் திரவ எரிபொருளை முதன் முதலாகக் கண்டறிந்தவர் ராபர்ட் எச். காட்டர்டு. அமெரிக்காவைச் சேர்ந்த இவர், மார்ச் 16, 1926ஆம் ஆண்டு திரவ எரிபொருளில் செல்லுகின்ற ராக்கெட்டை விண்ணில் ஏவிச் சாதனை

முனைவர் ஆசுரா




படைத்தார். இவரும் இவர் குழுவினரும் 1926 முதல் 1941 வரை மொத்தம் 34 ராக்கெட்டுகளை விண்ணில் ஏவியுள்ளனர். அவை மணிக்கு 885 கிலோ மீட்டர் வேகத்தில் சென்றன. அதன் திரவ எரிபொருள், கோஸோலின் மற்றும் திரவ ஆக்சிஜன் ஆகியவற்றால் ஆனது. ராபர்ட் எச். காட்டர்டு மொத்தம் 214 கண்டுபிடிப்புகளுக்குக் காப்புரிமை பெற்று வைத்திருந்தார். அதில் முதன்மையாகக் கருதப்படுவது பல் வேறு கட்டங்களைக் கொண்ட ராக்கெட்

பையன்!


மாதிரி மற்றும் திரவ எரிபொருளைப் பயன்படுத்தும் ராக்கெட் மாதிரி. வயிற்று வலி உள்பட பல்வேறு நோய்களால் அவதிப்பட்ட போதிலும், அசராத மனிதர் இவர்.

சனியைப் பிடித்த...!

சனிக்கிரகத்தைச் சுற்றி வளையங்கள் வரையக் காண்கிறோம். அதில் எத்தனை வளையங்கள் இருக்கும்? பொதுவாக 7 வளையங்கள் உள்ளன எனக் கூறுவர். இவற்றை A, B, C, D, E, F, எ என வகைப் படுத்துகின்றனர். ஆனால் ஒட்டுமொத்த வளையங்கள் மற்றும் உட்பிரிவுகளைச் சேர்த்தால் இவை மொத்தம் 13. இதனுள் அ முதல் எ வரையுள்ள வளையங்களும் அடங்கும். இந்த வளையங்களுக்கும் சனிக்கிரகத்தின் மையப் பகுதிக்கும் இடையேயுள்ள தூரத்தையும்கூட



முறையாகக் கணக்கிட்டுள்ளனர். இப்படியே 13 வளைய உட்பிரிவுகளைச் சுற்றிச் சுற்றியே மிகப் பெரிய ஆராய்ச்சி களைத் தொடர்ந்து வருகின்றனர். அட; சனியை மனிதர்கள் பிடிக்கிற காலமா இது!



இனிக்கும் நீதி!

புலேந்திரன்

வெள்ளை நிறத்தில் ஒருசேவல்
வேங்கை மலையில் வாழ்ந்ததுவாம்!
'கொள்ளை அழகு' என்றேதான்
குருவிகள் அதனைப் புகழ்ந்திடுமாம்!

பார்க்கும் உணவைச் சேவலுமே
பாய்ந்தே சென்று தின்றிடுமாம்!
கேட்கும் மற்றக் கோழிகளை
கீழே தள்ளிக் கொத்திடுமாம்!

ஒருநாள் அந்தச் சேவலுமே
ஓடைக் கரையில் வரும்போது
மரத்தில் இருந்த காகத்தின்
மலர்ந்த முகத்தைப் பார்த்ததுவாம்!

அதனைப் பார்த்த சேவலுமே
''அடுப்புக் கரியாய் நிறம்இருந்தும்
நிதமும் உன்றன் முகத்தினிலே
நீங்கா மகிழ்ச்சி பார்க்கின்றேன்!

ஆனால் அழகு வெள்ளைநிறம்
அமைந்தும் எனக்கு மகிழ்ச்சிஇல்லை!
ஏனோ எனக்குப் புரியவில்லை''
என்றே சொல்லி வருந்தியதாம்!

''இருவரும் செல்வோம் காலையிலே
இரையைப் பார்த்தால் என்னைப்போல்
கருத்தாய் நீயும் செய்திடணும்''
காகம் சொல்ல ஒப்பியதாம்.

மறுநாள் காலை சேவலுடன்
மலையின் சரிவில் இரைதேடி
சீராய் சென்றது அக்காகம்
அசந்துக் கிடந்த எலி பார்த்து

'காகா' என்றே பாடியது:
காகக் கூட்டம் கூடியது:
கொத்திச் சென்று எலியதனை
கூடித் தின்றது: மகிழ்வாக!





மீண்டும் சென்றன இணையாக
மேலும் 'இரை'யின் நினைவாக!
நீண்ட பாதை ஓரத்தில்
நெல்லைப் பார்த்தது சேவலுமே!


'கொக்... கொக்...' என்றது கூப்பிடவும்
கோழிகள் நான்கு வந்தனவாம்!
கொத்திக் கொத்தி அவற்றுடனே
கொண்டைச் சேவலும் தின்றதுவாம்!

கோழிகள் நெல்லைக் கொத்தியதும்
கொண்டைச் சேவலும் மனங்குளிர
'கொக்கரக்கோ' பாடியது
குதூகலத்தைக் காட்டியது.

"எந்த நிறமும் அழகேதான்
இதயம் வெளுப்பாய் இருந்திட்டால்!
உண்ணக் கொடுத்து உண்டாலே
உள்ளம் திளைக்கும் மகிழ்ச்சியிலே!

என்பதை உணர்ந்தேன்
உன்னாலே!
இனிய நண்பா! வாழிய
நீ!"
என்றே சேவல் இயம்பியது.
இதுதான் இனிக்கும் நீதியுமே!





தாமஸ் ஆல்வா எடிசன்

விழா என்றால் தவிர்க்க முடியாத விஷயமாக விளங்குவது அலங்காரம். அதிலும், திருமணம், பொதுக்கூட்டம், வருடப் பிறப்பு, ஆலய விழாக்கள்.. என்று எல்லா விழாக்களிலும் இப்போது முதலிடம் பெறுவது, மின்விளக்கு அலங்காரம்!

முதன் முதலாக, இந்த வெளிச்ச அட்டகாசம் ஆரம்பமானதும் ஒரு புத்தாண்டு விழாவில்தான்!

அது, 1879ஆம் ஆண்டு நிறைந்து, 1880ஆம் ஆண்டு ஆரம்பமாகும் தருணம். நியூயார்க் நகரில் உள்ள மென்லே பார்க்கில், ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருக்கின்றனர். அந்த இரவு வேளையில், பொது மேடையில், 800 விளக்குகளை ஒரே நேரத்தில் எரிய வைத்தார் அவர். கூடியிருந்த மக்கள் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்த முடியாமல் திகைத்துப் போனார்கள்; பிரமித்து நின்றார்கள். வெகு தூரத்திலிருந்து, இந்த



விளக்கொளியைக் காண ரயிலில் பயணித்து வந்தவர்களின் மனம் வியப்பில் நிரம்பிற்று.



விளக்கொளி கொண்டு வியக்கச் செய்தவர், தாமஸ் ஆல்வா எடிசன் (Thomas Alwa Edison). அவருடைய கண்டுபிடிப்பான மின்சார விளக்கு, உலகின் போக்கையே புரட்டிப் போட்ட அரிய கண்டுபிடிப்பு.

விஞ்ஞானத்தின் வளர்ச்சி வேகத்தைக் கூட்டிய கண்டுபிடிப்புகளில் இது குறிப்பிடத்தக்கது.

அலெக்சாண்டர் ஃப்ளமிங் கண்டுபிடித்த பென்சிலின் (penicilin) பல்லாயிரக்கணக்கான மக்களின் நோயைத் தீர்த்த அற்புதம்.



வெளிச்சம் பிறந்த கதை!



அலெக்சாண்டர் கிரகாம் பெல் 1876ல் கண்டுபிடித்த தொலைபேசி அடுத்த அற்புதம்! 1941ல் Konard Zuse கண்டுபிடித்த கம்ப்யூட்டர், Joseph Micephore Niepce கண்டுபிடித்த காமிரா, ... போன்றவை இந்த வரிசையில் குறிப்பிடத் தக்கவை.

பரந்து விரிந்த எல்லையைக் கொண்டது உலகம் என்பதை மாற்றியவை இத்தகைய கண்டுபிடிப்புகள்தான்! உலகின் மிகச் சிறந்த பத்து கண்டுபிடிப்புகள் என்கிற பட்டியலில் இவை குறிப்பிடப்படுகின்றன.

இன்று நியான், ஆர்கான் போன்ற வாயுக்கள் நிரப்பப்பட்ட விளக்குகள்; குழல் விளக்குகள், சீரியல் பல்புகள், சின்ன சின்ன குமிழ் விளக்குகள் என்று ஆச்சர்யமூட்டும் பல்புகளைக் காண்கிறோம். இவற்றுக்கெல்லாம் தொடக்கம், 1809ல் ஹம்பரி டேவி (Humphrey Davy) கண்டுபிடித்த ஆர்க் லேம்ப் (arc lamp) என்பதும் குறிப்பிடத்தக்கது.

- பி.முகுந்தன், ஏழாம் வகுப்பு,
குழந்தை ஏசு பள்ளி, சென்னை

மாறுவேடத்தில் நகர்வலம் வந்து கொண்டிருந்தார் மன்னர் மகிபாலன். வழியில், நான்கு இளைஞர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கவனிக்க நேர்ந்தது. ''எனக்கு மட்டும் நூறு பொற்காசுகள் கிடைத்தால், அதை வைச்சு முன்னேறுவேன்'' என்றான் முதல்வன். ''ஏண்டா, நம்ம நாலு பேருக்கும் அதே நிலைதானே. ஏன் பிரிச்சுப் பேசறே?'' என்றான் அடுத்தவன். இதைக் கவனித்த மன்னர், அவர்களை நெருங்கிச் சொன்னார். ''நீங்கள் பேசியதைக் கேட்டேன். நான் உதவுகிறேன். ஆனால், நீங்கள் முன்னேறியதை எப்படி அறிவது?'' அதைக் கேட்ட அந்த நால்வரில், கனகன்

பயனுள்ள செலவு!

என்பவன் சொன்னான். ''ஐயா, சரியாக மூன்று ஆண்டு காலம் முடிந்து, இதேநாள் இதே இடத்தில் சந்திப்போம். எங்கள் வளர்ச்சி உங்களுக்குப் புரியும்'' என்றான். அதை ஏற்ற மன்னரும் பொற்காசுகளை அளித்துத் திரும்பினார்.

மூன்று ஆண்டுகள் கழிந்தன. அதே நாள், அதே இடம், அதே முன்னிரவு நேரம்!

மாறுவேடத்தில் வந்த மன்னனை, அவர்கள் வர வேற்று வணங்கினர். ''ஐயா, நீங்கள் செய்த உதவி காலத்தால் மறக்க முடியாதது. நான் சிறந்த அறிஞரை குருவாகப் பெற்றுள்ளேன். பயின்றேன்; அறிஞன் என்ற புகழுடன் பொருட்செல்வத்துடன் வாழ்கிறேன்,'' என்றான் முதலாமவன்.

''பலே!'' என்றார் மன்னர்.

''நான் தங்கள் உதவியால், உடலை இரும்பாக்க வல்ல பயிற்சிகளை மேற்கொண்டேன். மல்யுத்தம், குத்துச்சண்டை, வாட்போர், ஈட்டி எறிதல், சிலம்பம் என கலைகளைப் பயின்றேன். அதைக் கற்பிக்கும் பயிற்சிக் கூடமும் நடத்தி வருகிறேன். மனபலமும், உடல் உறுதியும் கொண்ட பல வீரர்கள் இதன் மூலம் இந்த நாட்டின் படையில் இடம் பெற்றிருக்கிறார்கள்,'' என்றான் அடுத்தவன். ''சபாஷ்!'' என்றார் மன்னர்!


''ஐயா, நான் ஒரு துறவியைச் சந்தித்து பணிவிடை செய்தேன். அவர் மக்களுக்குத் தேவை, அமைதியும்,



குட்டிக் கதை

றன அடக்கமும்தான். அதற்கான வழி, சைவ உணவுகளை ஏற்பதுதான். அதனால், சச்சரவுகள் குறையும்; சகிப்புத்தன்மை வளரும் என்றார். எனவே, அதை போதிப்பதையே என்னுடைய கடமையாக்கிக் கொண்டு நாடெங்கும் பயணிக்கிறேன். மக்களின் வரவேற்பைப் பெறுகிறேன்,'' என்றான் மூன்றாமவன். 'ஓ!' என்றார் மன்னர்!

''ஐயா, தாங்கள் கொடுத்த பணத்துடன் எங்கள் கிராமத்துக்குச் சென்றேன். தலைநகரில் இருந்து வெகுதூரத்தில் அது இருக்கிறது. தவிர, மேட்டு நிலம்! எனவே, விவசாயமும், குடிநீரும் இன்றி துன்பப் பட்டனர் மக்கள். தங்கள் பொருள் உதவியால், சிறிய தடுப்பணைகளைக் கட்டினேன். கிணறுகளை ஏற்படுத்தினேன். விவசாயம் செழித்தது; அதனால் இப்போது அங்கு பஞ்சம் இல்லை. அடிப்படைக் கல்வி கற்பிக்கவும் கல்விக் கூடம் ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர வேறு எதையும் என்னால் செய்ய இயலவில்லை,'' என்றான் நான்காமவனான கனகன்!



''பிரமாதம்!'' என்று அவனைப் பாராட்டிய மன்னர், ''உனக்களித்த பணம், நான் செய்ய வேண்டிய பணியைச் செய்திருக்கிறது. உன்னை அந்தப் பகுதியின் கிராம அதிகாரியாக நியமிக்கிறேன்'' என்று சொல்லி, வேடத்தைக் கலைத்தார். நால்வரும் மீண்டும் வணங்கினார்கள்.

- டி.ஜானகி,
குளித்தலை

முரளிதரன் ஏன் இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் முழுமையாக ஆடவில்லை? இதற்கு முரளிதரனின் பதில்:

''நான் 800 விக்க்கெட்டுகள் எடுக்க 8 விக்கெட்டுகள் தேவைப்பட்டன. இனி டெஸ்ட் மேட்சுகளில் ஆடமுடியாது என்று எனக்குத் தோன்றிவிட்டது. ஒரு டெஸ்ட் மட்டும் ஆடி அதுவும் உலகின் நெ.1 டெஸ்ட் அணியுடன் ஆடி அந்த 8 விக்கெட்டுகளையும் எடுத்துவிடலாம் என்று எனக்கு நானே சேலஞ்ச் செய்துகொண்டேன். என்னுடைய கடைசி டெஸ்ட் பந்தில் அதைச் சாதித்துக் கொண்டேன்.''

முரளிதரனும் கும்பிளேவும் பெங்களூரில் ஸ்பின் பௌலருக்கான அகாடமியை ஆரம்பிக்கப்போகிறார்கள். சென்னையிலும் அப்படியொரு அகாடமியை ஆரம்பிக்கவேண்டும் என்பது முரளிதரனின் விருப்பம். ஏற்கெனவே சென்னையில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கான அகாடமி இருப்பது குறிப்பிடத்தக்கது.


இந்திய அணியில் சுரேஷ் ரைனா நிரந்தர இடம்பிடித்துவிட்டார். அவர் அடிக்கும் சிக்ஸர்கள் எல்லோரையும் ஆச்சரியப்படுத்துகின்றன. இதற்கு ரைனாவின் பதில் - ''என் அம்மாவின் சத்தான உணவுதான் என்னைப் பலசாலி யாக்கியுள்ளது.''

'இந்த வருடம் டாப் 5க்குள் வந்துவிடவேண்டும்' என்றுதான் சாய்னா நேவால் சபதம் எடுத்தார். ஆனால் தொடர்ந்து மூன்று சர்வதேசப் போட்டிகளை வென்றதன் மூலமாக, அவர் இப்போது உலகின் இரண்டாவது சிறந்த வீரராக முன்னேறிவிட்டார். பீஜிங் ஒலிம்பிக்கில் அரையிறுதிப் போட்டியில்









ச.ந. கண்ணன்

நுழையும் வாய்ப்பைக் கோட்டை விட்ட சாய்னா, லண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதைத் தன் லட்சியமாகக் கொண்டுள்ளார்.

இந்திய டென்னிஸ் வீரர் லியாண்டர் பெயஸ் சினிமாவுக்குள் நுழைந்துள்ளார். ஹிந்தி படமான 'ராஜதானி எக்ஸ்பிரஸ்' என்கிற படத்தில் அவர் நடிக்க உள்ளார். "இதுவரை 12 வாய்ப்புகள் வந்துவிட்டன. சினிமாவிலும் முயற்சி செய்யலாம் என்றுதான் நுழைந்துள்ளேன். என்ன ஆனாலும், டென்னிஸ்தான் என் உயிர் மூச்சு," என்கிறார் பெயஸ்.

காமன்வெல்த் போட்டிக்கான ஸ்டேடியம் அமைப்பதில்

சகாப்தம்!

பல முறைகேடுகள் நடந்துள்ளதால், அடுத்த இருபது ஆண்டுகளுக்கு ஒலிம்பிக் போட்டியை நடத்தும் வாய்ப்பு இந்தியாவுக்கு நிச்சயம் கிடைக்காது என்று விளையாட்டு விமரிசகர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். காமன்வெல்த் போட்டியை இந்தியா திறம்பட நடத்தினால் மட்டுமே, இந்தியாவை மற்ற நாடுகள் மதிக்கும். அப்போதுதான் ஒலிம்பிக் போட்டிக்கு இந்தியா தயாராகும்போது, மற்ற நாடுகளின் ஆதரவு கிடைக்கும். காத்திருப்பது மட்டும் தான் இப்போதுள்ள ஒரேவழி!





✱ சுரேஷ் ரைனா


ஆதி
கதை, படம்: பிள்ளை
அற்புதம் காணவாரீர் கட்டணம் 1 முட்டை – ஆதி
ஆதியோட விளம்பரத்தைப் பார்த்தியா?
பார்த்தேன், என்ன அதிசயமாய் இருக்கும்?
சரி, ஒரு முட்டையோட போய்ப் பார்ப்போம்.
நான்தான் முதல்ல போவேன்.
பலேடா ஆதி... உன் விளம்பரம் அற்புதமா வேலை செய்யுது. நல்ல வசூல்!



நண்பர்களே, பெயிண்ட் இல்லாம, பிரஷ் இல்லாம இப்ப ஒரு படம் வரையப் போறேன் பாருங்க.
ஜிம்பா, பும்பா, பும்பா... படமே வா...! அற்புதம்...! நண்பர்களே! அறிவாளர்களுக்கு மட்டுமே தெரியும் இந்தப் படம்...
அறிவாளிகளே! உங்களுக்குப் படம் தெரியுதா... முட்டையை, இந்தப் பாத்திரத்துல வையுங்க
படமே தெரியலை, நம்மை வைச்சு காமெடி பண்றான்.
எங்களுக்கே தெனாலிராமன் கதையா? இந்தா.. வாங்கிக்க.
ஹ! அந்தக் கதையை நீயும் படிச்சுட்டியா..!?
ஆதி இதுதான்டா அற்புதம் ஹா... ஹா...

இனிக்கும் காப்ஸ்யூல்!



வீரசேனனும் மந்திர மலரும்

ஆசிரியர் : நெல்லை சுந்தர். வெளியீடு : கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.30/-

வீரசேனனும் மந்திர மலரும், விசித்திரக் குள்ளன் ரத்தின சேனன் ஆகிய இரண்டு கதைகளைக் கொண்டுள்ள புத்தகம். இரண்டுமே, குழந்தைகளுக்கான வசீகரத்துடன் எழுப்பப்பட்டுள்ளன. அரும்பாடுபட்டுத் தேடிக் கொண்டு வந்த மந்திர மலரானது, மன்னன் தர்மசேனனை உயிர்ப்பிப்பதும், வீரசேனன் அதற்கான காரணத்தைச் சொல்வதும் வெகு அழகு. அதைப் போன்றேதான், விசித்திரக் குள்ளன் 'நம் தோற்றத்தால் நொந்து போக வேண்டாம்; நாம் வெற்றி பெறலாம்'' என்று துணிவூட்டுகிறான். தேவதை, பாம்பு, அரக்கன், பூதம்.. என்று சுவாரஸ்யங்களின் அணிவகுப்புடன் கூடியது.



குட்டி யானையும் சுட்டி முயலும்

ஆசிரியர் ஈ.சோதி, வெளியீடு: நன்மொழிப் பதிப்பகம், 16, கங்கைவீதி, வசந்தி நகர், புதுச்சேரி - 605003. விலை ரூ.30/-



குட்டி யானையும், அதன் நண்பர்களான மான்குட்டியும், முயல் குட்டியும் செய்யும் லூட்டிகள் அமர்க்களம். அதுவும் குழந்தைகளுக்கே உரித்தான குறும்பும், சிரிப்புமாக கும்மாளமிடுகின்றன. நம் குழந்தைகளின் விளையாட்டை, இந்த மூவரும் விளையாடுவதும் அந்த விளையாட்டுகளின் மூலம் சொல்லப்படும் அறிவுரையும் சிறப்பு. தவிர, நட்பு என்பது எதிர்பார்ப்பு இல்லாதது என்பதையும் பளிச்சென்று புரியவைத்திருக்கிறார் ஆசிரியர். சுலப நடை; வாசிப்பது சுகம்!

அறுபத்து மூவர் அறிமுகம்

ஆசிரியர் : சௌரி ராஜகோபால். வெளியீடு : ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை - 4. விலை ரூ.50/-

'அறுபத்து மூன்று நாயன்மார்கள்' என்று சிவாலயங்களின் பிரகாரத்தில் பார்த்திருப்போம். அவர்களைப் பற்றி நாம் அறிந்தது அநேகமாக அவ்வளவுதான் இருக்கும். அந்த அடியார்களைப் பற்றி, ரத்தினச் சுருக்கமாக - மிகச் சிறந்த அறிமுகமாக, குழந்தைகள் அறியும் விதமாக, வண்ண ஓவியங்களுடன் வெளிவந்துள்ள புத்தகம். பெரியபுராணத்தின் சுருக்கமான வடிவம் 'திருத்தொண்டர் தொகை' என்று சொல்லலாம். அதுமாதிரி, அறுபத்து மூவர் சரித்திரத்தின் 'காப்ஸ்யூல் வடிவம்' இது. வண்ணக் கலவையாய் பளிச்சிடுகிறது புத்தகம்.



- ராகுல்



வால் பையனில் (வானியல்) 1.ஷேக்ஸ்பியர் டகம் பார்க்கலாமா? 2.எவரெஸ்டை விட உயரம் முதல் இந்தியர். இந்த மூன்று தலைப்புகளுமே மிகவும் ருமை. - **ஆர்.எஸ்.அரவிந்த், மயிலாடுதுறை** ✱இன்று ழந்தைகள் முதற்கொண்டு பரவலாக இருக்கும் பிரச்னை தலைமுடி திர்தல் என்பது. அதற்குத் தீர்வாக விளங்கியது. 'கேசம் காக்கும் ணவுகள்' கட்டுரை. - **எம்.மிருணாளினி, உ. எண் : 1567, மதுரை** வெற்றிக்குப் பெரிதும் காரணம் எது? என்ற பட்டிமன்றத் தொகுப்பு. பாரம்! அறிவார்ந்த கருத்துகள்! பல அதில் மிளிர்ந்தன. பேசிய மாணவிகள் ம் புத்திசாலிகள்! - **கே.கந்தரூபி, மேலகிருஷ்ணன்புதூர்** ✱ஆதி படக்கதை பிரமாதம். றிவியல் கதையும் சூப்பர். - **அ.அருண்பாலாஜி, உ. எண் 1651, கும்ப** **ாணம்** ✱உருளைக் கிழங்கு என்றாலே எனக்குக் கொள்ளை ஆசை. கடைசி உருளைக் ழங்கு அறிவியல் சிறுகதை, வாழ்வியலுக்கு உற்சாகம் தந்த விதம் மனத்தைக் கொள்ளை காண்டது. - **ஆர்.ஜி.சரஸ்வதி, மணலிவிளை** ✱'வெற்றிக்குப் பெரிதும் காரணம் எது? ன்று மாணவிகளின் பேச்சைப் படிக்கும்போது, இந்தக் காலக் குழந்தைகள் எவ்வளவு ழ்ந்து சிந்திக்கிறார்கள் என்று அவர்களை நினைத்துப் பெருமை கொள்ள வைக்கிறது. - **ர்.பிருந்தா, மதுரை** ✱கவர் ஸ்டோரியைப் படித்தபோது, சிக்கனமும் சேமிப்பும் ஒரு கை வருமானம்தான் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. இன்றைய சேமிப்பு நாளைய துகாப்பு என்று தெளிவு படுத்திவிட்டீர்கள். - **ம.அக்ஷயா, உ. எண் 1346, அரூர்**

சேமிப்பின் மதிப்பையும் முக்கியத்துவத்தையும் விளக்கிய துளித் துளியாய் கவர் டோரி அருமை! சாதனை படைக்கத் தேவையான குணங்களை மாரியம்மாள் மே.நி. பள்ளி ணவிகள் பட்டிமன்றமாக மாற்றி பட்டாசாய்ப் பொரிந்து விட்டார்களே! தலைவர்கள், றிஞர்களின் சம்பவம் சமயோசிதமாய்ச் சிந்திக்கவும் வைக்கிறது. - **தேளூர் வீ.பெரியசாமி** கலகலா காலனியில் கொஞ்சம் இனிப்பு... கொஞ்சம் கசப்பு.. என்று இடம்பெற்ற ஜோக்குகள் னைத்தும் டாப்பு! - **அ.ஸ்ரீராம் விஜய், உ. எண் 1704,** நாமக்கல் ✱ஆங்கிலேயரின் டிமைத் தளையினின்று அரும்பாடுபட்டு காந்தி, நேரு போன்ற தியாகச் சீலர்கள் மீட்டுத் த விடுதலைத் திருநாளை அலட்சியப்படுத்தாமல் கொண்டாடிக் குதூகலிக்க அறிவுறுத்தும் காகூவின் தேசிய அழைப்பைக் கரவொலி எழுப்பி வரவேற்கிறோம். - **ச.ஆ.கேசவன்,**

அழகான அழகு!

னாம் மணியாச்சி ✱ 'முத்து' அதிரடி கைச்சுவை. அது மட்டுமல்ல; ாரையும் ஏமாற்ற நினைப்பதும் தவறு ன்பதை உணர்த்தியது. - **வளர்மதி னோதாஸ், கன்னியாகுமரி** 'சம்பவம்', 'தெரியுமா' பகுதிகள் லம் நிறைய நிகழ்வுகளை அறிந்து காள்ள முடிகிறது. - **ரா.சீதாராமன், உ. ண் 449, மதுரை**



பெயரைச் சொல்; பரிசை வெல் - 6







1. ____________ 2. ____________ 3. ____________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

....


வீட்டு முகவரி : ....

.... பின்கோடு ....

போட்டி பரிசு ரூ.1000/-


கொடுக்கப்பட்டுள்ள படங்களைக் கவனித்துப் பாருங்கள். இவை தொடர்பான செய்திகளும், இவற்றுக்கான வேறு படங்களும் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன. அவற்றின் மூலம், இங்கே தரப்பட்டுள்ள படங்களின் பெயர் என்ன என்று கண்டுபிடித்து, கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்திரித்து அனுப்புங்கள். சரியான விடைகள் எழுதுவோரில், பத்து பேருக்குக் குலுக்கல் முறையில் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதி. முடிவு தேதி : 30.9.2010

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை-32



கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1751

1752

1753

1754

1755

1756

1757

1758

1759

1760

1761

1762

1763

1764

1765

1766

1767

1768

1769

1770

1771

1772

1773

1774

1775

ர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 * Registered as a Newspaper in Srilanka